# புதிய சமதர்மம்

පුදිය සමධර්මම් PUTHIYA SAMADHARMAM

இதழ் : 38 ஜூலை 2001 விலை : ரூபா 10.00





# தமிழ் முஸ்லீம் தலைவர்கள் செல்ல வேண்டிய பாதை எது?

**தமிழ் முஸ்லிம் கட்சிகள் இது வரை காலமும் மேற்கொண்டு வந்த அரசியல் பயணம் முற்றிலும் பயனற்றது என்பது யதார்த்தமாகியுள்ளது. மாறி மாறி ஆட்சி செய்து வந்துள்ள முதலாளித்துவ, சிங்கள பேரினவாதக் கட்சிகளுக்கு தாங்களும் முதலாளித்துவ போக்கில் முண்டு கொடுத்து உதை வாங்கும் கட்சிகளாக இனிமேலும் இவை செயற்படுவது அவமானத்துக்—குரியதாகும்.**

தமிழ் முஸ்லீம் கட்சிகள் போடுதடிகளென நினைத்து அவற்றில் பேரினவாதக் கட்சிகள் சவாரி செய்தது போதும். ஐ. தே. க. விடமிருந்தோ, பொதுஜன முன்னணியிடமிருந்தோ எதையாவது பெற்றுக் கொள்ளலாமென இக்கட்சிகள் இன்னும் எண்ணுகின்றனவா? ஒன்றுமாறி இன்னொன்றுக்கு ஆதரவளித்து வந்து இக்கட்சிகள் மண்கவ்வியது தான் மிச்சம்.

1994 ல் முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க இங்கே உள்ளது பயங்கரவாதப் பிரசிசினையே ஒழிய தமிழ் தேசிய பிரச்சினையல்ல என்று கூறியதை சந்திரிகா அம்மையார் மறுதலித்ததை தமிழ்க்கட்சிகள் பாராட்டின. ஆனால் சந்திரிகாவின் செயற்பாடுகள் விஜேதுங்க கூறியதையே அடியொன்றியதாக அமைந்தது. அதனால் தமிழ் மக்கள் அளப்பரிய விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

இம்முறை இக்கட்சிகள் ஐ. தே. க. யை ஆதரிக்க முன்வந்துள்ளன. இது மிக ஆபத்தான போக்கு என்பதை நாம் மிக அழுத்தம் திருத்தமாக கூறி வைக்க விரும்புகிறோம். ஒற்றையாட்சி முறையை விட்டு ஒரு அங்குலமும் நகர முடியாது என்று வெளிப்படையாகக் கூறும் ஐ. தே. க. யை ஆதரிப்பது விளக்கைப் பிடித்துக் கிணற்றில் விழுந்த கதையாகத்தான் முடியும். உத்தேச தேசிய அரசாங்கத்தில் கரு ஜயசூரியவே பிரதம மந்திரியாக பதவியேற்கக் கூடும் . கரு ஜயசூரியா ஒரு இராணுவமயப்பட்ட பேரினவாத போக்குடையவர் என்பதை தமிழ் முஸ்லீம் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, அமைக்க உத்தேசிப்பது தேசிய அரசாங்கமா? இது ஒரு அசல் ஏமாற்று வித்தை. வரப்போவது ஒரு சிங்கள தேசிய அரசாங்கம். அது தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் இடதுசாரிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் எதிரானதாகவே திகழும். சுருங்கக்கூறின் அது மேட்டுக்குடியினரின் நலன் காத்து தமிழ் முஸ்லிம் இனங்களையும் ஏழை சிங்கள மக்களையும் ஈவிரக்கமற்ற முறையில் தாக்கி அழிப்பதற்கே முற்படும்.

இன்று மக்கள் தெரிவு செய்ய வேண்டியது மேற்குறிப்பிட்டது போன்ற தேசிய அரசாங்கமா? அல்லது சமாதானத்தை வேண்டி நிற்கும் இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சியா? என்பது தான் கேள்வியாகும். நிச்சயமாக, தமிழ் முஸ்லிம் கட்சிகளை இடதுசாரி இயக்கம் சார்ந்து அதனைக் கட்டி எழுப்ப உழைப்பதே நன்மையைக் கொண்டு வரும்

## தமிழ்ப் பத்திரிகையாளருக்கு எதிராக சதி

பிரபல தமிழ் பத்திரிகையாளர் த. சிராமிற்கு எதிராக அரச சார்பு பத்திரிகைகளும், உபாலி குறூப் நிறுவன பத்திரிகைகளும் விசமப் பிரசாரம் செய்து வருகின்றன. சிவராம் அவர்களை புலிகளின் உளவாளி என அவரின் படத்துடன் செய்தி வெளியிட்டும் உள்ளன. இதனால் சிவராமுக்கும், அவரது குடும்பத்திற்கும் அபாயம் ஏற்படலாம்.

முதுகு எலும்பில்லாத அரசியல் தலைமைகளுக்கு ஊதுகுழலாக இருக்க விரும்பும் செய்தி ஊடகங்களின் சதி வேலையே இது . சிவராமை எழுத்துக் களத்தில் சந்திக்க திராணி இல்லாத எலும்புத் துண்டுகளுக்காக துணைபோகும், கருங்—காலிகளின் செயற்பாட்டை புதிய சமதர்மம் வன்மையாகக் கண்டிக்கிறது.

## கடந்த வருடம் 18000 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்

கடந்த வருடம் 18,000 பேர் அவசர காலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்-டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் தமிழர் ஆவார். 2,500க்கு மேற்பட்ட தமிழர்கள் பல்வேறுபட்ட இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவுதம் தெரிய வருகிறது. உண்மையில் கைது செய்யப்-பட்டவர் தொடர்பாக அத்தாட்சிப்பத்திரம் பாதுகாப்பு பிரிவினர் வழங்க வேண்டும். ஆனால் அத்தகைய எதுவும் நடைபெறு-வதாகவும் தெரியவில்லை. ஆனால் தற்போது தெரியாத நிலையில் பல தடுப்பு முகாம்கள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## கலைஞர் ஜெயதிலகா பண்டார யுத்த எதிர்ப்பு இசைப்பயணம்



நடைபெற்று வரும் கொடிய யுத்தத்திற்கு எதிராக தென் இலங்கை கலைஞர்கள் சிலர் கலைஞர் ஜெயதிலக பண்டார சகிதம் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள் யுத்தத்தின் கொடுமையை விளக்கும் பாடல்களை மிக அழகாகப் பாடி வரு—கின்றனர். யுத்தத்தை எதிர்க்கும் அரசியல் கட்சி தலைவர்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் பேசுவதற்கு இவர்கள் இடம் கொடுத்துள்ளனர். வணக்கத்துக்குரிய தந்தை அருட்சகோதரர் யூட்ஸ் அவர்களின் கல்நெஞ்சத்தையும் உருகச் செய்யும் பேச்சும் நிகழ்ச்சி முழுவதும் இடம் பெறுகிறது. தமிழில் தோழர் சிவகுருநாதனின் மொழி பெயர்ப்பு தெளிந்த நீரோடை போல் அப்படியே கருத்தை புரிய வைக்கின்றது.

கலைஞர் ஜெயதிலக பண்டாரவின் வெலிக்கடை படுகொலை பாட்டுக் கேட்பவர்களின் விழிகளில் இருந்து நீராக பெருக வைக்கிறது.

தென் இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் நடைபெறும் இவர்களின் இசைப் பய—ணத்தை இமை கொட்டாமல் மக்கள் பார்த்து வருகின்றனர். வீரவிதான, சிங்கள உருமையா போன்ற இனவாத அமைப்—புக்கள் இனவாத நச்சுவிதைகளைத் தூவி விடும் இவ்வேளையில், மக்கள் இக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு அளித்து வருவது நம்பிக்கை ஏற்படுத்தும் நிகழ்வாகத் தெரிகிறது.

www.padippakam.com



# மலையகத் தலைவர்களின் பாய்ச்சல்கள்

1970களில் பெருந்தோட்டத்துறை அந்நிய செலவாணியை அதிகளவில் ஈட்டித் தரும் துறையாக விளங்கியது. இதன் காரணத்தினால் அரசாங்கம் இத்துறையை விருத்தி செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளானது. இதுவே இக்காலப் பகுதியில் பெருந்தோட்டத்துறையை அரசாங்கம் தேசிய மயமாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பெருந்தொகைப்பணம் செலவழிக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட பெருந்தோட்டத்துறை, மீண்டும் உலகவங்கி. சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் ஆலோசனைக்கிணங்க, தனியார் மயப்படுத்தப்பட்டது.

இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்ட வேளையில் தான் தலைவர் சந்திரசேகரன் இலங்கை தொழிலாளர் காங்கிரசை விட்டு வெளியேறினார். அல்லது விலக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினார். அன்று அவருக்கு கை கொடுத்தது தோட்ட தொழிற்சங்கங்களாகும். மலையக மக்கள் முன்னணி உருவாகியதும் அதன் மூலமே சந்திரசேகரன் அரசியலில் தனக்குரிய இடத்தை பெற்றுக் கொண்டார். அவருக்கு அரை அமைச்சர் பதவி கிடைத்ததும், இந்த தொழிற்சங்க அத்திவாரத்தினால் ஆகும். இன்று தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்தை இடை நடுவில் கைவிட்டதன் பின்பே சந்திரசேகரனுக்கு தொழிற்சங்கம் கசக்கத் தொடங்கியுள்ளது. இதனால் தான் இன்று அவர் கூறுகின்றார். தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கம் என்ற மாயையில் இருந்து விடுபட வேண்டம் என தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் தோட்டத் தொழிற்சங்கங்கள் இரண்டறக் கலந்த நிலையே காணப்படுகிறது. அரசியலிலும் அதே நிலைதான். இத் தொழிற்சங்கத் தலைமைகள், பல்வேறு வலது சாரி சக்திகளுடன் பாராளுமன்ற ஆசனத்திற்காக, பேரம் பேசுவதும் இவர்களை துரும்பாக வைத்துக் கொண்டே இன்று மலையக மக்கள் முன்னணிக்கு எதிராக மலையக மக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். தமது நாளாந்த வாழ்வில். பொருளாதார சுமையால் தாம் படும் துன்பங்களுக்கு மலையக மக்கள் முன்னணி எத்தகைய பரிகாரத்தையும் காணப் போவதில்லை என்பது இம்மக்களுக்குப் புரியத் தொடங்கியுள்ளது. இதன் காரணத்தினால், மலையக மக்கள் முன்னணி மிது அண்மைக் காலமாக புகைச்சல்கள் கிளம்பத் தொடங்கியுள்ளன. இதேவேளை மலையக மக்கள் முன்னணிக்குள்ளும் உட்கட்சி முரண்பாடுகள் பெரியளவில் இடம் பெற்றுள்ளன. இதனாலேயே பீ. ஏ. காதர் போன்றோர் வெளியேறி இருக்கலாம்.

அண்மைக்காலமாக மலையக மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட வினோத அரசியல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. ஐயா தொண்டமான் செல்லச்சாமியிடம் சேவலை இழந்தார். பின்பு ஐயாத்துரையின் இந்திய வம்சாவளி பேரணியின் மயில் மீது ஏறி வந்தார். அதேவேளை மற்றொரு பக்கத்தில் கொழும்ப வாழ் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும் என்ற அறை கூவலுடன் மனோ கணேசன் களத்தில் இறங்கியுள்ளார். இவரும் முன்பு மயிலில் ஏறித்தான் மாகாண சபைக்குள் நுழைந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் திடகாத்திரமாக இருப்பதால் மனம் சலித்துப்போன மனோ கொழும்புத் தமிழர்கள் மத்தியில் "சடுகுடு" விளையாட்டு விளையாட தொடங்கியுள்ளார். இவருக்கு பின்னால் சில ஊடக வியலாளர்களும் திரிகின்றனர். மயிலில் ஏறி மாகாண சபை சென்ற மனோ கணேசனுக்கும், ஐயாத்துரைக்கும் இடையே ஏற்பட்ட முறிவினால் விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளது. இன்று வரை அது முற்றுப்பெறவில்லை. இந்நிலையில் தான் மனோ கணேசன், மயில் போனாலும் பறவாய் இல்லை. குயிலை என்றாலும் பிடிப்போம். குயில் கறுப்பாக இருந்தாலும் பிரச்சினையில்லை. பாராளுமன்றத்தினுள் நன்றாக கூவலாம் என்ற நப்பாசையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். இவர் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் தான் அதிருப்தியாளர்களும் அங்கம் வகிக்கின்றனர். அன்று 1983ல் இனக்கலவரத்தின் போது இந்தியா சென்ற மேல் மாகாண சபை உறுப்பினருக்கு அன்று கசந்த ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் இனித்தது வியப்புக்குரிய ஒன்றாகும். இன்று எட்டாத திராட்சை புளிக்கும் என்று கூறிய நரியன் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளார்.

பொதுவாகவே மலையகத் தலைவர்கள் ஆட்சியில் இருக்கும் கட்சியுடனேயே உறவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றனர். அது ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி பொது ஜன முன்னணியாக இருந்தாலும் சரி மலையகத் தலைவர்களை பொறுத்தவரை இவ் இரண்டு கட்சிகளுக்கும் இடையேயான கொள்கைகளில் அதிக வேறுபாடு இல்லை என்பதாகும். ஆனால் தொழிலாளர்களின் தொழிற்சங்க ரீதியான அரசியலை முன்னெடுத்தால், இவர்களால் காற்றடிக்கிற பக்கம் சாய்கின்ற அரசியலை செய்ய முடியாது. இவர்களின் தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையமாக வைத்த அரசியலையே முன்னெடுக்க வேண்டும். இன்று உள்ள சூழ்நிலையில் இவர்களால் இது முடியாது. இதனால் தான் சந்திரசேகரன் மலையகத் தொழிலாளர்கள் தொழிற்சங்க மாயையில் இருந்து வெளியேற வேண்டும் என்று கூற, மனோகணேசன், கொழும்பு வாழ் தமிழ் மக்களை ஒன்றுபடுமாறு கூறுகின்றார்.

இன்று மலையக மக்களை ஒன்று படுமாறு கூறும் மலையக தலைவர்கள் தமக்குள் பல்வேறுபட்ட முரண்பாடுகளை வளர்த்து வருகின்றனர். இது கொள்கை ரீதியான முரண்பாடு அல்ல, அதிகார கதிரையில் யார் இருப்பது என்ற அவாவினால் ஏற்பட்ட முரண்பாடுகளாகும். மனோ கணேசனுக்கும். ஐயாத்துரைக்கும் பிரச்சினை, சந்திரசேகரனுக்கும் கனகராசாவுக்கும் பிரச்சினை. செல்லச்சாமிக்கும் தொண்டமானுக்கும் பிரச்சினை, யோகராசாவுக்கும் தேவராசாவுக்கும் பிரச்சினை இம் முரண்பாடுகள் அனேகமாக நீதிமன்றத்தில் வழக்கில் உள்ளன. தமக்குள் ஒன்றுபாடாத இவர்கள் மலையக மக்களை ஒன்றுபடக் கோருவது வினோதமான ஒன்றாகும்.

# குடிசன மதிப்பீட்டுக்கு இயல்பு நிலை மீளட்டும்

சந்திரிகா அரசாங்கம் வடக்கு - கிழக்கு அடங்கலாக நாடு பூராவும் எதிர்வரும் ஜுலை மாதம் குடிசன மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ள உள்ளது. குறிப்பாக வடக்கு - கிழக்கைப் பொறுத்தளவில் இந்த நடவடிக்கையானது ரோமாபுரி எரிந்து கொண்டிருந்த போது நீரோ மன்னன் ஃபீடில் வாசித்த கதையாகவே இருக்கிறது. உண்மையில் சிதறுண்டு. சின்னாபின்னப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கில் இத்தகைய நடவடிக்கையினனை மேற்கொள்வதானது வெந்த புண்களில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகும். அரசாங்கத்திற்கு எள்ளளவாவது நீதி நியாயம் வழங்குவதில் நம்பிக்கை இருந்தால் இந்த நடவடிக்கையை நிறுத்தியாக வேண்டும்.

காலம் காலமாக தமிழ் முஸ்லீம் மக்களை மட்டம் தட்டும் மிலேச்சத்தனமான போக்கானது ஒட்டு மொத்தமாக இன்று முழு நாட்டையுமே அதல பாதாளத்தில் தள்ளியுள்ளது. பரந்துபட்ட சாதாரண சிங்கள மக்களே தமது எதிர்காலம் பற்றி ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலைமையிலுள்ள மக்களைத் திசை திருப்புவதற்கு சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இத்தகைய யுக்திகளைக் கையாள்வது வழக்கமாகி விட்டது.

வடக்கு- கிழக்கைக் காட்டிலும் தென் இலங்கையிலும். வெளிநாடுகளிலும் தான் கூடுதலான தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாட்டின் சனத்தொகையில் 6% மான மக்களே வடக்கு கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கின்றராயினும் அவர்கள் நாட்டின் நிலப்பரப்பில் 1/3 பகுதியையும் 2/3 கரையோரப் பகுதிகளையும் தமதாக்கி வைத்திருக்க எப்படி முடியும்? என அன்று முதல் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வாய்ப்பாடாக இருந்து வந்துள்ளது. நிலவிக் கொண்டிருக்கும் போர் சூழலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், உதாரணமாக யாழ் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், இன்று இங்கு அரைவாசி சனத்தொகையே காணப்படுகிறது. அதாவது 1981 இல் நடத்திய குடிசன மதிப்பீட்டின் போது அங்கே சனகத்தொகை 850,000 மாக இருந்தது. 1991 இல் மமதிப்பீடு நடத்தப்பட்டிருந்தால் அது ஏறத்தாழ 1000,000 யாக அதிகரித்துக் காணப்பட்டிருக்கலாம். ஆனால் அங்கு இன்று 500,000 குறைவான மக்களே வாழ்கின்றனர். அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். வலிகாமம் வடக்கில் 10 வருடங்களுக்கு மேலாக ஏராளமான மக்கள் மீளக் குடியேற அனுமதியின்றி சிதறுண்டு அல்லலுற்றுக் கொண்டு இருக்கின்றனர். அதுபோலவே சென்றவருடம் சாவகச்சேரி பகுதி தரைமட்டமாக்கப்பட்டதை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறும் நிலமை உருவாகவில்லை. எனவே தான் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குடிசன மதிப்பீட்டை நடத்தி தமிழ் மக்களின் சனத்தொகை வெகுவாகக் குறைந்து விட்டது என்பதைக் காட்டுவதற்காகவே தற்போதைய குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது. இதனைப் பயன்படுத்தி பாராளுமன்றத்திற்கான பிரதிநிதித்துவம். கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அரசியல் பொருளாதார வசதிகளுக்கு பெரிதும் ஆப்பு வைப்பதே இன்றைய குடிசன மதிப்பீட்டின் கபட நோக்கமாகும். தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இது ஒரு கட்டமாக அமைகின்றது.

கொடிய யுத்தத்தினை நிறுத்தி மேலும் தாமதமின்றி எரியும் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் திர்வு காணப்படுவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டிய அரசாங்கம் அதனைச் செய்வதற்கு வக்கற்ற நிலையில் முடங்கிப் போயுள்ளது. பேரினவாதிகளை திருப்திப்படுத்தும் வகையில் புலிகள் மிது குற்றம் சுமத்தி சாக்குப் போக்கு சொல்லி காலம் கடத்தி வருகின்றது. இதனிடையில் திரை மறைவில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டைத் தாரைவார்க்கும் அடிமைக் கடிதம் (Letter of Intent) எழுதிக் கொடுத்துள்ளது.

இன்னும் சொன்னால் இன்று முழு நாட்டிலுமே குடிசன மதிப்பீடு போன்ற நடவடிக்கையினை மேற்கொள்வதற்குரிய சூழ்நிலை காணப்படவில்லை. ஒருபுறம் வடக்கு- கிழக்கில் யுத்தம் கோரமாக நடைபெறுகிறது. மறுபுறம் தென்னிலங்கையில் அராஜகம் கோலோச்சுகிறது. வன்செயல்கள், லஞ்சம், ஊழல். கொலை. கொள்ளை போன்ற ஈனங்கள் யாவும் மலிந்து காணப்படுகின்றன. மல்வத்தை மகாநாயக்கர் றம்புக்வல்ல விப்பாசி தேரரை அண்மையில் சந்தித்த பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்காவைப் பார்த்து "மக்கள் வீதிகளில் சுதந்திரமாகச் செல்ல முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. மக்கள் அச்சம் பீதியின்றி சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துங்கள்" என மகாநாயக்கத்தேரர் அடித்து வலியுறுத்தியிருந்தார்.

1991 இல் இடம்பெற வேண்டியிருந்த குடிசன மதிப்பீடு நடத்தப்படவில்லை. அதன் காரணமாகத்தான் இந்த நாட்டிற்கு இழப்புக்கள் ஏற்பட்டது என்பது அல்ல. அன்று யுத்தம் காரணமாகவே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இன்று அன்றையதை விட பன்மடங்கு மோசமான போர் சூழல் தான் காணப்படுகிறது. எனவே இந்த கொடிய யுத்தத்தை நிறுத்தி தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு இயல்பு நிலை மீண்ட பின்னரே குடிசன மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை சந்திரிகா அரசு ஏற்க மறுத்தால், அது அடிப்படை மனித விழுமியங்களையும், நாகரிகத்தையும் முற்றிலும் துறந்து எதேச்சதிகாரமாக நடந்து கொள்கிறது என்பதை உலகம் கண்டு கொள்ளும்.

வ. திருநாவுக்கரசு
புதிய இடதுசாரி முன்னணி.
நவசமசமாஜக்கட்சி.

படிப்பகம்

www.padippakam.com



# பம்பலப்பிட்டி பாலியல் கொடூரம்



ஜனாதிபதி செயலகத்தில் இருந்து எட்டிய தூரத்தில் இருக்கும் பொலிஸ் நிலையமே, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையமாகும். இங்கு வைத்தே சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த கந்தையா சிவரஞ்சனி (வயது 21) வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த திருமதி விமலாதேவி இராமச்சந்திரன் (வயது 39) ஆகிய இரு தமிழ் பெண்கள் மீதும் மோசமான பாலியல் துன்புறுத்தல்கள் இடம் பெற்றுள்ளன.

மேற்படி இரு பெண்களும் தமது பாதுகாப்பில் உள்ளனர் என கூறிய பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலியல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என மறுப்பறிக்கை விடுத்திருந்தார். ஆனால் கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி மேற்படி பெண்கள் மீது கொடூர பாலியல் துன்புறுத்தல்கள் இடம் பெற்றுள்ளன, என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தமிழ் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், வல்லுறவுகள் நாளாந்தம் நடக்கும் நடவடிக்கைகளாக மாறியுள்ளன. பாதுகாப்பு பிரிவினரே இதைச் செய்தும் வருகின்றனர். தமிழ் பெண்கள் மீது எத்தனையோ பாலியல் வல்லுறவு கொலை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தபோதும் அண்மைக் காலங்களில் மிகவும் பிரபல்யமான பாலியல் வல்லுறவு கொலைகள் பட்டியலாகத் தொடர்கின்றன. வளர்கின்றன. கிருசாந்தி, ரஜனி கமலிட்டா, கோணேஸ்வரி, சரதாம்பாள் என நீண்டு கொண்டே போகின்றன. சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக் கொலையை விசாரணை செய்து வந்த பொலிஸ் அதிகாரிகள், மேற்படி குற்றத்தை நிருபித்தற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லையென கைவிரித்துள்ளனர். இன்றுள்ள நவீன யுகத்தில் சிறு துரும்பைக் கொண்டே குற்றவாளியை சட்டத்தின் பிடிக்கள் சிக்க வைக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால் சாரதாம்பாள் விடயத்தில் பாதுகாப்பு பிரிவு வழமைபோல் கையை விரித்துள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சிவரஞ்சனி, விமலாதேவி ஆகியோருக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்படவில்லை. இதற்கு மன்பும் இரண்டு பெண்கள் மீது பாலியல் துன்பறுத்தல் நடைபெற்றதாக வெளிவந்த செய்தி உடனடியாக மறைக்கப்பட்டது.

ஒரு பெண் ஜனாதிபதி இருக்கும் நாட்டிலேயே இந்த அனர்த்தங்கள் நிகழ்கின்றன. இன்று தமிழ் பெண்கள் மீது மாத்திரம் பாலியல் துன்பறுத்தல்கள், வல்லுறவுகள் நடைபெறவில்லை. தென் இலங்கையில் இருக்கும் எத்தனையோ அப்பாவி பெண்கள் மிதும் இத்தகைய துயர கொடூரங்கள் புரியப்படுகின்றன. அனேகமானவை பாதுகாப்பு தரப்பினராலேயே மேற்கொள்ளப்படுகின்றன. 1983ஆம் ஆண்டு கலவரம் முதன் முதலில் ஆரம்பித்தது பொரளை ஆகும். இது அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, அவர்களின் வாசஸ்த்தலம் இருந்த வாட்பிளேசில் இருந்து குறிப்பிட்ட தூரத்திலேயே நடைபெற்றது.

எனவே ஜே. ஆர். இதற்கு அனுசரணையாக இருந்துள்ளார் என்பது வெள்ளிடைமலையாகும். பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம் ஜனாதிபதி செயலகம் என்பவற்றிற்கு அண்மையில் இருக்கும் ஒரு காவல் நிலையமாகும். இங்கு வைத்தே தமிழ் பெண்கள் மீது அடிக்கடி பாலியல்துன்புறுத்தல்கள் இடம் பெற்று வருகிறது. தமது உயர் அதிகார தரப்பினர் அண்மையில் உள்ளனர் என்ற பயம் எதுவும் இல்லாமலே பொலிசார் இத்தகைய கொடூரத்தைப் புரிகின்றனர். யுத்தத்தை வெல்ல வேணும் என்பதற்காக பாதுகாப்பு பிரிவினருக்கு வகை தொகையற்ற அதிகாரத்தை வழங்கி உள்ளதாலேயே இந்த அநியாயம் தொடர்ந்து நிகழ்கிறது.

மன்னாரில் மிக அண்மையில் இரண்டு பெண்கள் மீது மிகக் கொடூரமாக பாலியல் வல்லுறவு நடவடிக்கையை மன்னார் பொலிசார் புரிந்து இருந்தனர். இதில் பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது வழக்கும் தொடரப்பட்டது. ஆனால் இன்று கொடிய குற்றத்தை இழைத்தவர்கள் மீது இரக்கம் காட்டப்பட்டு வரப்படுகிறது..

யுத்தம் வெல்லப்பட வேண்டும் என்பதற்காகவே குற்றம் இழைத்தவர்களுக்கு சலுகை காட்டும் முயற்சியிலேயே இலங்கை அரசு தலைகீழாக செயற்படுகிறது. 1987ம் ஆண்டு காலப்பகுதியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் இக் கொலைகளுக்கு சூத்திரதாரியாக கருதப்பட்டவர் ஜனகபெரேரா. ஆனால் இன்று அவர் இராணுவ தளபதியாக நியமிக்கப்படும் அளவிற்கு அவருக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது. அவர் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர் என்பதால் தூதராக்கப்பட்டார். இதே போன்று கீழ் மட்டத்தில் கொலைகளுக்கும், பாலியல் வல்லுறவுகளுக்கும் காரணமாக இருந்தவர்கள் மீதும் கருணை காட்டப்படுகிறது. இது இராணுவ ஆட்பற்றாக்குறையை சமாளிக்க எடுக்கும் முயற்சியாகவும் இருக்கலாம். 45,000 பாதுகாப்பு படையினர் இராணுவத்தில் இருந்து தப்பியோடி நாட்டுக்குள் இருந்து குற்றமிழைத்து வருகின்றனர்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற கொடூரத்தை மூடி மறைப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் கருங்காலிகளும் துணைபோனதாக தெரிகிறது. தமது வயிற்றை நிரப்புவதற்காக ஒரு சமுதாயத்திற்கு இவர்கள் எவ்வளவு துரோகம் செய்கிறார்கள். மேற்படி சம்பவத்தை சட்ட ரீதியான பிரச்சினைக்குள் மட்டுப்படுத்த நம் தமிழ் தலைமைகள் முயல்வது போல் தெரிகிறது. இது ஜனாதிபதிக்கும் ஓரளவில் விருப்பமாகக் கூட இருக்கும். மேற்படி பெண்கள் மீது பாலியல் துன்பறுத்தல்கள் நிகழ்வதற்கு பம்பலப்பிட்டியில் உள்ள லொட்ஜ் நடத்துனர்களும், துணைபோயுள்ளதாகவும் கதை அடிபடுகிறது. தமது உயிரை கையில் பிடித்துக் கொண்டு கொழு வரும் அப்பாவிகளை தமது வியாபார நலன்களுக்காக பலி கொடுக்கும் லொட்ஜ் நடத்துனர்கள் இருக்கவே செய்கின்றார்கள். குலத்தை காட்டிக் கோடரிக்காம்பு போல் இருக்கும் இவர்கள் இன்று கொழும்பில் வேர் விட்டுள்ளனர். பாதுகாப்புப் பிரிவினர்களின் தில்லுமுல்லுகளுக்கு இவர்களும் துணை போகின்றனர். அடைக்கலம் எனவரும் மக்களை பணத்தைக் கறக்கக் கூடிய வகையில் கறப்பதுடன், தற்போது பாலியல் தேவைகளுக்கும் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இவர்களின் விசப் பரீட்சைக்கு தமிழ் பெண்களே பலியாகின்றனர். இன்று கொழும்பில் இருக்கும் தமிழ் தலைமைகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவை வளர்த்துக் கொள்ளத்துடிக்கும் போக்கை கொண்டவையாக உள்ளன. இவர்கள் அறிக்கை விடுவதும், கலந்துரையாடல் நடத்துவதிலுமே, நாட்டம் உடையவராகக் காணப்படுகின்றனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும், அவசரகால சட்ட விதிகளின் கீழும் அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் பொலிஸ் நழலைய பொறுப்பதிகாரிகளுக்கு குவிக்கப்பட்டுள்ளன. இவ் அதிகாரங்கள் இவர்களிடம் இருக்கும் மமதையினாலேயே இவர்கள் பொலிஸ் நிலையங்களை கசாப்பு கடைபோல் நடத்துகிறார்கள். கைது செய்யும் நபரை புலிச் சந்தேக நபர் என்னும் போர்வையை போர்த்து, தமது விருப்பங்கள் அனைத்தையும் இவர்கள் மீது பரீட்சிப்பதற்கு இவர்களுக்கு அதிக வாய்ப்பு உண்டு. உயர் நீதிமன்றத்தில் சித்திரவதைகளுக்கு எதிரான வழக்குகளில் எந்தவித குற்றமும் சுமத்த முடியாமல் பொலிஸ் தரப்பினர் திண்டாடுவதையும், இதனால் குற்றம் சுமத்தப்பட்டவாகள் விடுதலை யாவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அப்பாவி இளைஞர்கள் பலர் எதுவித குற்றமும் இளைக்காமலே மாதக் கணக்கில், வருடக் கணக்கில், சிறைகளில் தமது காலத்தைக் கழித்து வருவதையும் நாம் கண்ணூடாகக் காண்கின்றோம்.

தொல்லை தவிர்ப்பு குழுவினர் பம்பலப்பிட்டி பாலியல் துன்புறுத்தல் விடயத்தில் தலையிட்டு பொலிசாரிடம் அறிக்கை கோரியுள்ளனர். தற்போது தொல்லை தவிர்ப்பு குழுவின் பணி வாய்முறைப்பாடு எடுப்பது மட்டும் போல தெரிகிறது. தொல்லை தவிர்ப்பு குழு பணி புரிய தொடங்கியவுடன் தான் பாலியல் வல்லுறவும் அதிகரித்த நிலை காணப்படுகிறது. தமிழ் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு துன்புறுத்தல் கொடுமைகளுக்கு எதிராக பரந்து பட்ட மக்கள் போராட்டமே இதை தடுப்பதற்கு உபயோகப்படும். இதைத்தவிர. வேறுவழியை காட்டுபவர்கள். அவர்களின் சுயநலத்துக்கு மாத்திரம் செயற்படுகின்றார்கள் என்றே கருத வேண்டும்.

தொல்லை தவிர்ப்பு குழுவும், பிரதி பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியாவும், படம் போட்டுக் காட்டி விடயத்தை முடித்துள்ளனர். இது ஒப்புதல் வாக்கு மூலம் போன்றதொரு நடவடிக்கையாகும். குறிப்பிட்ட பெண்கள் தொல்லை தவிர்ப்பு குழு முன் வரவில்லை. எனவே இவர்கள் யார் காதில் பூ வைக்கிறார்கள்.

தற்போது மருதானை பொலிஸ் சாவடியில் 37 வயது நிரம்பிய தமிழ் குடும்ப மாது ஒருவர் பொலிசாராலும் இராணுவத்தினராலும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது பிரதிப்பொலிஸ்மா அதிபரும், தொல்லை தவிர்ப்புக் குழுவும் மூடி மறைக்க முயற்சித்த பம்பலப்பிட்டி சம்பவத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.




## வடக்கு கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்காக விக்கிரமபாகு குரல் எழுப்பினார்


வடக்கு கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு அக்காலப் பகுதிக்கு விடுமுறையும். வேதனமும் வழங்கப்பட வேண்டும் என அரசாங்க சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேல் மாகாணசபை இத்தகையோர்க்கு எத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இழுத்தடித்து வந்தள்ளது. இது சம்பந்தமாக புதிய இடதுசாரி முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கலாசிதி விக்கிரமபாகு கருணாரத்ன சபை விவாதத்தின் போது கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு பதிலளித்த மேல்மாகாண சபை முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே அப்படிப்பட்ட எவரும் மேல் மாகாணத்தில் இல்லை என்றுள்ளார். உடனே விக்கிரமபாகு பாதிக்கப்பட்ட 40 பேரின் மகஜரை உடனே முதலமைச்சரிடம் கொடுத்துள்ளார். மகஜரை பெற்றுக் கொண்ட முதலமைச்சர் இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருந்து வருகின்றனர். இது சம்பந்தமாக கலாநிதி விக்கிரமபாகு போராட்ட நடவடிக்கையில் இறங்குவதற்கான ஏது நிலைகளை ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய பாகிஸ்தான் சமாதானப்பயணம் – குறுகிய கால நன்மைக்கான தேடலா?



பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பேர்வெஸ் முன்ராப் கஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு "எந்த நேரமும், எந்த இடத்திலும், எந்த மட்டத்திலும் தயார்" என அறிவித்திருந்தார். பாகிஸ்தானின் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரிப் பதவிக்காலத்தில் இராணுவத் தளபதியாயிருந்த முஷ்ராப் கடந்த கால கார்கில் யுத்தத்தில் சில இரகசிய செயற்பாடுகளில் இறங்கியிருந்தபடியால் அவர் கொச்சையாக "மிஸ்டர் கார்கில்" என்று அழைக்கப்பட்டதுண்டு. கடந்த புரட்டாதியில் வொசிங்டனில் அமெரிக்க இந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய இந்திய பிரதமர் அட்டல் பிகாறி வாஜ்பேய், "முஷ்ராப்போடு பேசுமாறு எல்லோரும் கூறிக்கொண்டிருக்கின்றர். நாங்கள், எதைப்பற்றிப் பேசுவது? லாகூருக்குச் சென்ற பஸ் வண்டி கார்கில் சென்று விட்டபின் நான் எப்படிப் பேசுவது? பாகிஸ்தானில் சுவாத்தியம் எப்படியிருக்கிறது? என்று கேட்கவா? அல்லது மனைவி பிள்ளைகள் எப்படி இருக்கின்றர் என்று வினவவா? " என்று கூறியிருந்தார்.

அதாவது அன்று இந்தியா கடும் போக்கினைக் கடைப்பிடித்தது. பாகிஸ்தான் எல்லை எமது எல்லைக்குள் பயங்கரவாதச் செயல்களை நிறுத்தும் வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்பது அதன் நிலைப்பாடாயிருந்தது.

வோசிங்டனில் வாஜ்பேய் சற்று நகைச்சுவையாய் கூறிய காரியம் இப்போது நடைமுறைக்கு வரப்போகும் அளவிற்கு நிலமை மாறியுள்ளது. அவர் 1999 மாசியில் லாகூருக்கு மேற்கொண்ட நல்லெண்ண பயணம் சற்று பிசு பிசுத்து போயிருந்தாலும் கூட தற்போது அவர் டில்லியில் உச்சிமாநாடு நடத்துவதற்குரிய மேற்படி முயற்சியை மேற்கொண்டுள்ளார். இந்தியா முன்பு ஒருதலைப்பட்சமாக ஆறுமாதங்களாக மேற்கொண்டிருந்த யுத்த நிறுத்தத்திற்கு எது வித பலாபலனும் ஏற்படாமலிருந்தமையால், தற்போது இந்த முயற்சியனால் பலனேதும் உண்டாவதற்கு இடம் இல்லை என்பது இந்திய ஆய்வாளர்களின் அபிப்பிராயமாகும். பாக்கிஸ்தானுக்கான முன்னாள் இந்தியத்தூதுவர் ஜீ. பார்த்தசாரதி குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளைக் கொண்டதாகவே உத்தேச பேச்சுவார்த்தை அமையுமென ஆலோசனை கூறியுள்ளார். இந்த விடயத்தில் பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் அப்துல்சத்தார் தெரிவித்த கருத்தானது முற்றிலும் எதிர்மாறானதாகவுள்ளது. "பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் இந்தியா ஒரு அடி முன்வைத்து இரண்டடி பின்வைக்கும் விதத்தில் நடந்து கொள்கின்றது. ஏனென்றால் பயங்கரவாத நடவடிக்கை கஷ்மீரில் தொடர்வதற்கு இராணுவத்திற்கு அளவு கடந்த அதிகாரங்களை வழங்கியுள்ளது. என அவர் கூறியுள்ளார்.

மறுபுறத்தில் இந்த அழைப்பினை இந்தியாவின் பலவீனம் என்றும் பாக்கிஸ்தான் தரப்பில் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பாக்கிஸ்தானை ஈடுபடுத்தாமல் இந்த பிரச்சினையில் ஒரு அங்குலம் கூட நகரமுடியாதென்பதனை இந்தியா உணர்ந்துள்ளது என்று பாக்கிஸ்தான் பிரப்ல செய்திப்பத்திரிகை ஒன்று கூறியுள்ளது. வாஜ்பாய் விடுத்துள்ள அழைப்பானது நீண்ட நாட்களாக அக்குவேறு ஆணிவேராக ஆராயப்பட்டு எடுத்த முடிவு அன்றி திடீரென திணிக்கப்பட்டதொன்றாக தோன்றுகிறது. அழைப்பு விடுப்பதற்கு சற்று முன்னராக பிரதமர் வாஜ்பாய் தனது சிரேஷ்ட அமைச்சர்களாகிய உள்துறை அமைச்சர் L. K. அத்வானி, வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜஸ்வன்ர் சிங், மற்றது நிதி அமைச்சர் ஜஸ்வன் சிங்கா ஆகியோருடன் தேசிய பாதுகாப்பினை மீளமைப்பதற்கான மந்திராலோசனை நடத்தி விடுத்த அறிக்கையின் படி, பாக்கிஸ்தான் கஷ்மீர் போராளிகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்துக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு ஆர்வம் காட்டுவது ஒரு ஏமாற்று வித்தையாகவே எடுத்துக் காட்டப்பட்டது.

எனவே தான் இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே காணப்படும் பரஸ்பர முரண்பாடுகளின் மத்தியில் உத்தேச பேச்சுவார்த்தைகள் சாதகமான விளைவிற்கு இட்டுச் செல்லுமா என்ற கேள்வி நியாயமானதே. பிரகடனப்படுத்தியிருந்த யுத்த நிறுத்தத்தின் மூலம் பாக்கிஸ்தானை ஒரு பலவீனமான அல்லது தற்பாதுகாப்பு நிலைக்குத் தள்ளுவதே வாஜ்பாய் தனது நோக்காகக் கொண்டிருக்கலாம். இந்த ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் பாக்கிஸ்தானுக்கு சற்று பின்னடைவை உண்டு பண்ணியதுடன் இந்தியா சார்பான சர்வதேச அபிப்பிராயம் பலமடைந்தது. அது மட்டுமல்ல காஷ்மீர் "ஹுறியற்" சர்வகட்சி மகாநாட்டு தலைவர்கள் மனதில் குழப்பங்களை ஏற்படுத்தவும் அவர்களை பல குரல்களில் பேசவும் இது வழிவகுத்தது.

இந்தியாவின் கை மிக வேகமாக மேலோங்குவதைக் கண்ட பாக்கிஸ்தான் கஷ்மீர் பகுதியில் தனது இராணுவ நடவடிக்கையை அதிகரித்தது. இந்தியாவின் யுத்த நிறுத்த நாடகத்தினை குழப்புவதே இதன் நோக்கமாக இருந்தது. எந்த நேரமும் எத்தகைய தாக்குதலையும் நடத்தி இந்திய தரப்பினரை நிலை குலையச் செய்யலாம் என்ற எண்ணம் கொண்டு இவர்கள் இந்திய உயர் பாதுகாப்பு வலயங்கள் மீது தமது தாக்குதலை தொடுத்தனர். யுத்த நிறுத்தத்திற்கு முந்திய ஆறுமாத காலத்தில் நான்கு தற்கொலை தாக்குதல்கள் மேற்கொண்ட அவர்கள் யுத்த நிறுத்த ஆறுமாத காலத்தில் 17 தாக்குதல்களை நடத்தினர். இதனிடையில் முஷ்ராப் தன்னை அரசியல் ரீதியாக பலப்படுத்திக் கொள்வதற்காக பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் நவா ஷரீப்பை சவூதி அரேபியாவிற்கு நாடு கடத்திய பின் அஞ்ஞான வாசத்திலிருந்து நாடு திரும்ப உத்தேசித்திருந்த மற்றைய முன்னாள் பிரதமர் பொனாஸிர் பூட்டோவிற்கும் கடுமையான அச்சுறுத்தல் விடுத்திருந்தார். அவர் நாடு திரும்பினால் இன்னும் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுமென எச்சரித்திருந்தார். அடுத்ததாக தனது நம்பிக்கைக்குரிய லெப்ரினன் ஜெனரல் முஸாபர் உஸ்மானிற்கு இராணுவ பொறுப்புக்களை வழங்கி தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கான நிலைமையை உருவாக்கி உள்ளார்.

எது எப்படியிருப்பினும் மிக கவலைக்குரிய நிலையில் உள்ள பாக்கிஸ்தான் பொருளாதாரம் தான் முஸாராவிற்கு எமனாக மாறலாம். இதனிடையில் முஷ்ராப் சர்வதேச ரீதியில் தனக்கு நன் மதிப்பை பெறுவதற்காக சீனா அடங்கலாக 10 நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டு பாக்கிஸ்தானின் வெளிநாட்டு கடன்களை ஓரளவு சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிபெறும் திட்டத்தையும் பெற்றுள்ளார். இன்றைய நிலைமையை நோக்கும் போது இந்தியாவின் ஆறுமாதகால யுத்த நிறுத்த நடவடிக்கை இந்தியாவுக்கு எதிராகவே திரும்பியுள்ள நிலையில் வாஜ்பாய் மே 23ம் திகதி நடத்திய மந்திராலோசனையை அடுத்து முஷ்ராப்பை பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார். எனவே இந்தியா சர்வதேச ரீதியில் பார்க்கும் போது சமாதான முயற்சியைக் கொட்டிக் குழப்பும் அத்தனை முயற்சிகளையும் பாக்கிஸ்தான் மேற்கொண்டிருந்த நிலையிலும் கூட தாராள சிந்தையுடன் செயற்படுவதாகவும் தனக்கு யோக்கியதை உண்டு என்பதையும் காட்டியுள்ளது. இந்தியாவில் மலிந்து காணப்படும் இன்னோரன்ன பாரிய பிரச்சினைகளில் இருந்தும் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அண்மையில் அடைந்த மாநில தேர்தல் தோல்விகளில் இருந்தும் மக்களை திசை திருப்புவதற்கும் இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இப்போது எதைப்பற்றி வாஜ்பாயும் முஷ்ராப்பும் பேசப் போகிறார்கள்? சர்ச்சைக்குரிய ஏனைய பிரச்சினைகள் தவிர கஷ்மீர் பிரச்சினைக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என பாக்கிஸ்தானும் லாகூரில் இணங்கப்பட்டவாறு, காஷ்மீர் இடங்கலாக எல்லா விடயங்களைப் பற்றியும் ஒரு "ஒட்டுமொத்தப் பேச்சுவார்த்தை" என இந்தியாவும், கொண்டிருந்த நிலைப்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. "திறந்த மனதுடன்" ஒரு "நெகிழ்வு" போக்கினை கடைப்பிடித்து பேசுவோம் என்று கூறும் பாக்கிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சத்தார் அதேவேளை கஷ்மீர் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து அணுகுவதுதான். நடைமுறைச் சாத்தியமாயிருக்கும் என்றும் கூறியுள்ளார். கஷ்மீரில் உள்ள "ஹுறியற்" தலைவர்களோடு முதலில் பாக்கிஸ்தான் நேரடியாக பேசக்கூடிய நிலைக்கு இந்தியாவை தள்ள வேண்டும் என்பதே பாக்கிஸ்தானின் திட்டமாக இருக்கிறது. மறுபுறத்தில் பின்கதவால் யாரையும் அனுப்பாமல் படிப்படியான அணுகு முறையில் ஏனைய விடயங்களை ஆராயும் அதேவேளை முதலில் பதட்ட நிலையை தணிப்பதுதான் இந்தியாவின் போக்காகவுள்ளது.

உச்சி மகாநாடுகளில் ஈடுபடும் தலைவர்கள் அனைத்து விபரங்களையும் அச்சொட்டாக கையாள்வதில்லை. எனவே இரு தலைவர்களும் எதிர்வரும் ஆடியில் சந்திக்கும் பட்சத்தில் பேச்சுவர்ர்த்தைக்குரிய ஒரு திட்டத்தை வகுப்பார்கள். பேச்சுவார்த்தை தொடங்கியபின் முஷ்ராப் முன்பு கூறியது போல் எல்லைக்கப்பால் பயங்கரவாதம் ஓயுமோ என்பதை பார்க்கலாம் என இந்திய இராணுவம் எண்ணுகிறது. அதேவேளை பாக்கிஸ்தானும் சர்வதேச மட்டத்தில் கீர்த்தியடைந்து அதன் மூலம் கடன்களை பெற்று தாண்டு கொண்டிருக்கும் பாக்கிஸ்தானின் பொருளாதாரத்தை மீட்கலாம் என்றும் எண்ணுகிறது.

எவ்வாறாயினும் இன்றைய நிலையில் ஆபத்துக்களும் குழப்ப நிலைகளும் இல்லாமல் இல்லை. சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு இஸ்லாமிய "ஜிகாட்" அமைப்புக்கள் வன்முறையை கட்டவிழ்த்து விடக்கூடும் "ஹுறியட்" அமைப்புக்கள் தாம் ஓரங்கட்டப்படுவதாக எண்ணினால் காஷ்மிர் மக்களை பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்வதற்கு தூண்டக்கூடும். ஒரு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை தக்க வைப்பதற்கு இரு தலைவர்களும் அரசியல்ரீதியாக மிக பலம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். நரகத்திற்கு போகும் பாதை நல்ல எண்ணங்களால் செப்பனிடப்பட்டுள்ளது என்பது பழமொழி. அதேபோல் இந்திய பாக்கிஸ்தான் இரு நாடுகளுக்கிடையிலான சமாதானப் பயணமும் கோணலான நல்லெண்ணங்களை கொண்டதாகவே காணப்படுகிறது.



படிப்பகம்





# அவர்கள் அனாதைகள் ஆக, இவர்கள் ஆடி மகிழ்கின்றனர்

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்று நேற்று தொடங்கியது அல்ல. 1948ல் இருந்தே ஆரம்பமாகியது. சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு பல்வேறு வழிகளில் தமது போராட்டத்தின் நியாயத்தை உணர்த்திய தமிழ் மக்கள் இன்று வலிமை மிக்க ஆயுதப் போராட்டத்தின் மூலம் தம்பக்க உண்மையை வலியுறுத்திக் கொண்டு இருக்கின்றனர். தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை எந்த தமிழ் மகனும் எதிர்க்க மாட்டான் என்பது தான் யதார்த்தமாக இருக்க வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் பல்வேறு இடங்களில் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய பகுதியில் வாழ்பவர்களை விட வன்னியில் வாழ்பவர்களே பெரும் துன்பச் சுழியில் சிக்கித் தவிக்கின்றனர். யாழ் குடாநாடு 1995ல் இலங்கை இராணுவத்திடம் சென்ற போது, அங்கிருந்து 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வெளியேறினர். இவர்களில் பெரும்பான்மையோர் வன்னிக்குச் சென்றனர். சிறு தொகையினர் தென்பகுதிக்கு வந்தனர். அவர்களிலும் கணிசமான பகுதியினர் கொழும்புக்கு வந்தனர்.

நடைபெற்றுவரும் கொடிய யுத்தத்தினால் 2 லட்சத்து 70,000 சிறுவர்கள் அனாதைகளாகி உள்ளனர் என பொது அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. இதே வேளை வடபகுதியில் 20 வீதமான மக்களுக்கு போசாக்கு இன்மை உள்ளதாக யாழ் பல்கலைக் கழக சமூகவியல் பேராசிரியர் தெரிவித்துள்ளார். வன்னியில் வாழ்கின்ற மக்கள் அரசின் பொருளாதாரத் தடையாலும், மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டாலும், பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வன்னியில் 7500 சிறுவர்கள் வறுமையினாலும், உடை வசதி இன்மையாலும் பாடசாலை செல்லாது இருக்கின்றனர். 2000 மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலை என்றால் என்னவென்று தெரியாத நிலையில் வாழ்கின்றனர். வன்னி மாவட்டத்தில் தாய் சேய் மரண விகிதங்களும் உயர்வாகவே உள்ளன. பாம்புத் தொல்லை காரணமாக பலர் வன்னியில் அநியாயமாக உயிரை இழந்து வருகின்றனர்.

உடையார்கட்டு கிருஷ்ணவேணி வயது 15 பிரமானத்தாறு - சுந்தரலிங்கம் வயது 35, விசுவமடு நாச்சிகுடா - ஆ. கணேசலிங்கம் வயது 19 பிரமானந்தாறு 32ம் வாய்கால் - விஜயரூபன் வயது 12

மேற்கூறப்பட்டோர் கடந்த மாதம் பாம்பு கடிக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை வன்னிப்பகுதியில் விசர்நாய் கடியும் மக்களை பெரிய அளவில் பாதித்துள்ளது.

விஸ்வமடு மயில்வாகனம்புரம் பகுதியைச் சோந்த யோகநாதன் யோகேஸ்வரி வயது 22 என்ற இரு பிள்ளைகளின் தாயார் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி மரணத்தை தழுவியுள்ளார். போதிய மருத்துவ வசதிகள் இன்மையாலேயே வன்னி மக்கள் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். சில சமயங்களில் சிகிச்சைக்காக வன்னியில் இருந்து வவுனியாவுக்கோ, அல்லது கொழும்புக்கோ வரும் நோயாளர்கள் இங்கு மரணமடைந்தால் அவர்களின் உடல்கள் கூட வன்னிக்கு கொண்டு போக முடியாத நிலையில் இருக்கிறது. இதனால் தென் பகுதியிலேயே உடலை அடக்கம் செய்து விட்டு வெறுங்கையுடன் வன்னி செல்கின்றனர்.

இத்தகைய சோக நிலையில் வன்னி மக்கள் வாழ மறுபக்கத்தில் இவை யாவற்றிற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்ற நிலையில் ஒரு கூட்டம் வாழ நினைக்கிறது.

தமிழ் மக்களின் 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் முறையே கனடாவில் 1 லட்சத்து 60 அயிரம் பேரும், இங்கிலாந்தில் 1 லட்சம் பேரும், ஜேர்மனியில் 50 ஆயிரம் பேரும், பிரான்சில் 40 ஆயிரம் பேரும், இத்தாலியில் 25 ஆயிரம் பெரும், அமெரிக்காவில் 35 ஆயிரம் பேரும், அவுஸ்திரேலியாவில் 32 அயிரம் பெரும், சுவிஸ்சில் 60 ஆயிரம் பேரும், ஏனைய ஐரோப்பிய நாடுகள் 44 ஆயிரம் பேரும் ஆக மொத்தம் 5 ல 46 அயிரம் பேர் உள்ளனர். இவர்கள் தாம் வாழும் நாடுகளில் ஆடல் பாடல்களுடன் எதிர்காலத்தைப் பற்றிய எந்த வித பயமும் இல்லாது வாழ்கின்றனர். இவர்களை மகிழ்விக்க பல இசைக் கோஷ்டியினர் அடிக்கடி தமிழ் நாட்டில் இருந்து இவர்களிடம் போய் வருகிறது. மேலை நாடுகளில் வாழும் தமிழ் மக்களில் சிலர் பொழுது போக்கிற்காக அடிக்கடி சிங்கப்பூருக்குச் போகின்றனர். சிங்கப்பூரில் அதிக தங்க நகைகளை வாங்கிக் கொண்டு தமது நாடுகளுக்குச் செல்கின்றனர்.

இங்கே கொழும்பில் இருக்கும் ஒரு பகுதியினர் அடிக்கடி கலை நிகழ்ச்சிகளை நடத்தி அதில் ஆளும் கட்சி முக்கிய பிரமுகர்களை வரவழைத்து சிறப்பிப்பதும் இவர்களுக்கு பொழுது போக்காகி விட்டது. அடிக்கடி அயல் நாட்டு தூதுவர்கள். இசைக் கோஷ்டிகளையும் அழைத்து மகிழ்கின்றனர். இதில் என்ன வேடிக்கை என்றால் வடக்கில் மார்க்சியம் பேசியோர் தெற்கில் ஆன்மீகம் பேசுகின்றனர். சில சமயங்களில் தம்மை மார்க்சியவாதிகள் என்றவர்களும், ஆன்மீகவாதிகளும் ஒரே மேடையில் தோன்றி பொன்னாடை போர்த்து புகழாங்கிதம் அடைகின்றனர். இன்று கொழும்பில் ஆன்மீகவாதமும், மார்க்சிய வாதமும் வியாபாரமாகி விட்டது. இதைச் செய்பவர்களும் மினு மினுப்பாகவே உள்ளனர். அரச துணை இவர்களுக்கு இருப்பதால் அவர்கள் தனிக் காட்டு ராஜாக்களாக உலா வருகின்றனர். போராட வேண்டிய மார்க்சீய வாதிகள் பொன்னாடைக்கு குனிந்ததால் உடலும் கூனி, கொள்கையும் குறுகி விட்டது

அண்மையில் இந்தியாவில் இருந்து வந்த பேராசிரியர் ஒருவர் வடபகுதியில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றி மிகவும் மனம் நொந்த நிலையில் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது கொடுக்க நினைப்பதிலும் பார்க்க மக்களுக்கு நிரந்தர விடிவை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். மக்களுக்கு ஏதாவது செய்தால், அவர்கள் மீண்டும் பாதிக்கப்படும்போது செய்வதால் என்ன நன்மை விளையப் போகிறது எனவும் அப்பேராசிரியர் வினா எழுப்பியுள்ளார். தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே பேராசிரியரின் விருப்பமாக உள்ளது.



வன்னியில் வாழ்கின்ற மக்கள் முழுத் தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது வாழ்வை தியாகம் செய்து வருகின்றனர். வன்னி மக்கள் படும் துன்பங்கள் எவரும் உதாசீனம் செய்யக் கூடாது. செய்ய நினைத்தால், அவர்கள் மனிதப் பிறவிகளாக இருக்க மாட்டார்கள். மற்றவர்கள் போராடட்டும் நாம் எமது போக்கை பார்ப்போம் என்ற போக்கிலேயே இன்று சிலர் தமது பாட்டை பார்க்கின்றனர். இது விடுதலை போராட்டத்திற்கு மாத்திரமல்ல, முழு சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கும் செயலாகும். பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகும் வேளையில், தமிழ் இளைஞர்கள் பலர் எதுவித காரணமும் இன்றி சிறைகளில் தடுத்து வைக்பட்டிருக்கும் நிலையில், சிஙகள பௌத்த பேரினவாதிகள், எதற்கெடுத்தாலும் தமிழ் மக்களை பழிவாங்கத்துடிக்கும் சூழ்நிலையில், சில அரச அதிகாரிகளுக்கும், வீட்டில் படுத்திருக்கும் சில இலக்கியவாதிகளுக்கும் விழா எடுத்து கிரீடம் வைக்க நினைப்பது பச்சை துரோகம் என்றே அடையாளம் காணலாம். போராட்டத்தில் இருப்பவர்களை கௌரவப்படுத்தலாம். அதைச் செய்ய விருப்பம் இல்லாவிட்டால் பேசாமல் இருக்கலாம்..

## ஒருநாடு

– கவிஞர் ஏ. இக்பால்

பிரித்தானியரின்
பிரித்தாளுதலை
அறிவு ரீதியாய்
அறிந்தவர் நாங்கள்!

அறிவால் அறிந்த
எதையும் தீர்க்கும்
நடைமுறைச் சாத்தியம்
நம்மிடம் இல்லை!

பேரினம் பேசும்
தேசியத்துள்ளே
சாதியில் பிரியும்
தேசியம் வேறு!

இனமும் மதமும்
மொழியும் இடமும்
கனமாய் அறிவைக்
காட்டவே யில்லை!

அதனால் நாட்டில்
அன்பும் அணைப்பும்
உதவா தாக்கி
உதறியே விட்டோம்!

நாட்டினை ஒன்றாய்
நாமுடன் காணும்
ஆற்றலை ஈயும்
அறிவுதான் வருமா?

2001 — 06 — 20

www.padippakam.com



# ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே



இந்திய அரசியல் வரலாற்றிலே யாரைப் பிரதமராகப் பிரேரிப்பது என்ற ஒரு கேள்வி எழுந்தது. எல்லோரினதும் கவனமும் அன்றைய அகில இந்திய காங்கிரசின் தலைவரும் தமிழ்நாட்டின் முதல்வருமான காலஞ்சென்ற திரு. காமராஜர் பக்கம் திரும்பியது. அன்று அவர் "கிங் மேக்கர்" என வருணிக்கப்பட்டார். அனுபவம் என்ற பல்கலைக்கழகத்திலே பட்டம் பெற்ற அந்தக் கட்டைப் பிரமச்சாரிக்கு பெயரைக் குறிப்பிடுவதில் சிக்கலே இருக்கவில்லை. ஆளும் கட்சியால் பாராட்டப்பட்டார். இலங்கையிலும் இவ்வாறு கூறப்பட்ட "கிங் மேக்கர்" என வருணிக்கப்பட்டவர் இலங்கையிலும் இருந்தார். அவர்தான் காலஞ்சென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சௌ. தொண்டமான் ஆகும்.

1994ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் வெற்றி பெற்று பொதுஜன முன்னணியில் அமைச்சர் பதவியை ஏற்றபொழுது இப்படித்தான் கூறினார்கள்.

ஆனால் அன்றைய சூழ்நிலையில் ஏயர் லங்கா நிறுவனத்திற்கு லட்சக்கணக்கான ரூபாய் நிலுவை கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற செய்திகள் வெளிவந்தன. பின்னர் அதிருப்தியாளர்கள் கணக்கு வழக்குகள் சரியாகக் காண்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் பின்னர் வெளியேறியதும் தெரிந்த விடயமேயாகும்.

இவை அனைத்திற்கும் பின் வேறு காரணங்கள் இருந்தது மட்டும் உண்மை. தலைவர் தொண்டமான் பொதுஜன முன்னணியில் இணைந்தார் என்பதை விட இவர் விலை கொடுத்து வாங்கப்பட்டார் என்பதே உண்மை. இதை எடுத்துச் சொல்வதற்கு அதிருப்தியாளர்களுக்குத் தைரியமில்லை. ஏனெனில் அவர்களும் இந் நடவடிக்கைகளுக்கு துணைபோனதே இதற்குக் காரணம். இதன் மூல காரணத்தை அண்மையில் ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ளது. சென்னை ஏயர் லங்கா முகவர் நிலையத்தின் கடனை அடைப்பதற்கு தொழிலாளர்களின் உழைப்பில் கட்டி எழுப்பப்பட்ட சௌமியபவன் அடவு வைக்கப்பட்ட கதையாகும். இதை தமிழ் தினசரிகள் வெளியிடுவதில்லை. காரணங்கள் அவர்களுக்கு மட்டுமே வெளிச்சம்.

இவை அனைத்தையும் விட இவர்களுக்கு வாக்களித்த மலையக மக்களை எல்லா வகையிலும் உதாசீனப்படுத்தியுள்ளனர். அரசுடன் இணைந்ததற்கு இ. தொ. கா. வின் பொதுச் சபை அல்லது அரசியல் சபை அதுவும் இல்லையெனில் ஏதோ ஒரு சபை எடுத்த முடிவின்படியே செயல்பட்டோம் என்று இவர்கள கூறினால், அடவு வைக்கும் தீர்மானம் எந்தச் சபையில் எடுக்கப்பட்டதோ? அது அவர்களுக்கு மட்டுமே வெளிச்சம். இ. தொ. கா வின் தலைமையகம் சிலகாலத்திற்கு முன் அவர்கள் ஆரம்பித்த இ. தொ. கா. ... என்ற பெயரில் திரட்டிய நிதியில் கட்டி எழுப்பப்பட்டது. ஆனால் அந்த நிதி பற்றியோ, அந்த நிறுவனம் பற்றியோ கேட்பார் எவரும் இல்லை. ஏனெனில் இதன் பங்குதாரர்கள் சாதாரணத் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களுக்கு இது பற்றி கேட்கக் கூடிய உரிமை உண்டு என்பதையாவது அறிந்தவர்களோ தெரியாது.

எது எப்படியானாலும் இன்று அந்த நிறுவனம் தங்களின் சொந்த காரணங்களுக்காக அடவு வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே இவர்கள் சம்பள உயர்வுபற்றியும் போராட்டம் பற்றியும், சத்தியாக்கிரகம் என்ற பெயரில் (அச்) சத்தியாக்கிரியையை சந்தியிலே விட்டுச் சென்றதாகும். இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றிய சில தொழிற்சங்கத் தலைவர்கள் விலை வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு இடதுசாரித் தொழிற்சங்கத் தலைவர் இதன் காரணமாக இப்பொழுது அட்டனில் அவரது அலுவலகத்திற்குக் கூட வருவதில்லை என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ஒட்டுமொத்தமாக இ. தொ. கா.-வின் தலைமையகம் கட்சியுடன் சேர்ந்து ரூபா 38793595.68 ரூபாவிற்கு அடவு வைக்கப்பட்டுள்ளது. இது இந்தக் கடனை வழங்கியது நிதியமைச்சரின் மேற்பார்வையில் இயங்கும் அரச வங்கியான இலங்கை வங்கியாகும். இந்த கடனை வழங்கி அனுமதி வழங்கியவர் அப்போதைய பொது முகாமையாளர் திருவாளர் கெமுனு எக்களாயக்காவாகும். ஆனால் . தொ. கா. இக்கடனை செலுத்தமுடியாத நிலையில் உள்ளது பற்றி அறிக்கை சமர்ப்பித்த பிரதி பொது முகாமையாளர் இ. தொ. கா. ஒரு லாபமீட்டும் நிறுவனம் அல்ல என்று கூறியிருக்கிறார். லாபமீட்டாத ஒரு நிறுவனத்திற்கு இந்த அளவ பெரிய தொகையை இவர்கள் வழங்கியதற்குக் காரணம் அரசியல் பின்னணியாகும். இந்த அளவு பெரிய தொகையை தலைவர் தொண்டமானால் செலுத்த முடியவில்லை என்பது ஏற்றுக் கொள்ளமுடியாதது என அவரின் உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்து சுகங்களைப் பற்றி அறிந்தவர்கள் கூறுகிறார்கள். எனவே கடன் வழங்கியது என்பதல்ல உண்மை. இவர்கள் அரசாங்கத்தை ஆதரிப்பதற்குக் கொடுத்த விலையாகும் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்தப் பின்னணியிலேதான் சம்பள உயர்வுப் போராட்டம் சத்தியாக்கிரகம் என்பவைகள் நடத்தப்பட்டு இறுதியில் ஒருசதம் சம்பள உயர்வுமின்றி இப்போராட்டம் வெற்றியடைந்தது என அறிக்கை விட்டு சத்தியாக்கிரியையை பிரின்ஸ் தியேட்டர் சந்தியிலேயே விட்டுச் சென்றதாகும். இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றி மலையக மக்கள் ஒன்று திரண்டாதல் ஏற்பட்ட வெற்றி என்று கூறி அறிக்கை விட்ட தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் இது பற்றி என்ன கூறப் போகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை அடவு வைக்கவில்லை என்றா கூறப்போகிறார்கள்?

"ஆதாரம் சண்டே லீடர்"

# சுதந்திர இளைஞர் கழகம் ஜனாதிபதிக்கு மகஜர்

கனம் அம்மணி,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. றேமன்ட் பெரேராவின் இராஜினாமா சம்பந்தமாக.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக எமது சுதந்திர இளைஞர் கழகம்" 05-06-2001 இல் அன்று நடத்திய விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இளைஞர் சேவைகள் மன்றமானது இளைஞர்களை பயனுள்ள நற்பிரசையாக உருவாக்குவது மட்டுமன்றி இளைஞர்களுக்கிடையே ஒற்றுமையையும், புரிந்துணர்வையும், கல்வி விளையாட்டு போன்ற துறைகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றி வருகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

கடந்த சில தினங்களுக்கு முன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. றேமன்ட் பெரேரா விடுத்திருந்த செய்தியை பத்திரிகையில் வாசித்ததும் எமது இளைஞர் கழகம் பெரும் அதிர்ச்சிக்குள்ளானது.

திரு றேமன்ட் பெரேரா தனது ராஜினாமா குறித்த செய்தியில் பின்வருமாரு காரணங்களைக் கூறியுள்ளார்.

மிக நீண்ட காலமாகத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நிறுவகிக்கப்பட்டு வந்த சுமார் 38 வதிவிடப் பயிற்சி நிலையங்கள் இம்மாதம் இறுதியோடு மூடிவிட தீர்மானித்துள்ளதாகவும் தேசிய பிரதேச ரீதியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் செயற்படுத்தி வந்த பல்வேறு வேலைத் திட்டங்களும் இம்மாத இறுதியோடு மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், சுமார் 50 இற்கும் மேற்பட்ட வெவ்வேறு தொழிற்பயிற்சி நெறிகள் இந்த பயிற்சி நெறிகளூடாக இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு தங்குமிட வசதியோடு 6 மாத. 1 வருட பயிற்சி நெறிகளை இளைஞர் பெற்று வந்ததாகவும் இந்நிலையங்கள் 20 வருட காலமாக இயங்கி வந்ததோடு சுமார் 10,000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயிற்சி பெற்று வெளியேறி சுயதொழிலில் ஈடுபட்டு வருவதாகவும்

இவை தவிர தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடா வருடம் நடத்தி வரும் இளைஞர் தினம், இளைஞர் பரிசுப்போட்டி, இளைஞர் விளையாட்டு விழா உட்பட சகல வேலைத்திட்டங்களும் இடைநிறுத் தப்படவுள்ளதாக்வும்

பிரதேச மாவட்ட போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ள நிலைமையில் தேசிய மட்ட போட்டிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் விளையாட்டுத்துறை ஆர்வம் கொண்ட இளைஞர் யுவதிகள் விரக்கியுற்றிருப்பதாகவும்

பிரதேச, மாவட்ட மாகாண மட்டத்தில் நடத்தப்பட்டு வந்த பயிற்சி நெறிகள், நிகழ்ச்சிகள், போன்றவற்றுக்கான கொடுப்பனவுகளும் இம்மாத இறுதியோடு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பயிற்சிநெறி இடைநிறுத்தப்பட்டு பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டு பயிற்சி நிலையங்கள் மூடப்படுவதனால் அங்கே கடமையாற்றும் விரிவுரையாளர்கள் ஏனைய தற்காலிக அமைய உரிமையாளர்கள் எதிர்காலம் கேள்விக்குறியாயுள்ளதாகவும்

இதற்கான பிரதான காரணம் 2001ம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மூலமாக அரசு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு பாரிய நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் யுத்த செலவு அதிகரிப்பின் காரணமாக அரசு ஒதுக்கிய நிதியை மீளப் பெற்றதனால் ஏற்பட்ட நிதி நெருக்கடியை சமாளிக்க முடியாமலும் தமது பயிற்சி நிலையங்களை மூடிவிட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலகத்திற்கும் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் எந்த வகையிலும் பிரயோசனப்படாத யுத்தத்திற்காக எந்த நியாயப்படுத்தலைக் கொண்டும் இந்நாட்டின் இளைஞர்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியை அரசு மீளப்பெற்றது இந்த நாட்டினுடைய இளைஞர்களின் எதிர்காலத்தையும், அபிவிருத்தியையும், இளைஞர்களிடையிலான ஒற்றுமையையும், சீர்குலைக்கும் ஒரு முயற்சியாக மட்டுமன்றி இளைஞர்களின் கவனத்தை திசைதிருப்ப முயற்சிப்பதாகவும் எமது "சுதந்திர இளைஞர் கழகம்" கருதுகிறது. இது போன்று எதிர் காலங்களில் நடைபெறாதிருப்பதற்கும், இடைநிறுத்தப்பட்டிருக்கும் சகல வேலைத்திட்டங்களையும் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அமைச்சை நீங்கள் பணிக்க வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள
ரவீந்திர
- தலைவர்
சுதந்திர இளைஞர் கழகம்
09.06.2001

படிப்பகம்

www.padippakam.com



# தடையினை நீக்கி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவது தான் யதார்த்தமானதாகும்

தேசிய இனப்பிரச்சினைக்கான அரரசியல் தீர்வு தொடர்பாக சந்திரிகா அரசாங்கம் முன் எப்பொழுதும் இல்லாதவாறு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதா? இல்லையா? என்பது பற்றி அரசாங்கத்திடம் தீர்க்கமான முடிவெதுவும் இதுவரையும் இல்லை. தடையை நீக்கினால் அன்றி பேச்சுவார்த்தையில் தாம் பங்குபற்றப் போவது இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வரும் நிலையில் தடையினை தற்காலிகமாகவெனினும் நீக்க வேண்டுமென பல்வேறு மட்டங்களிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. மந்திரி சபைக்குள்ளேயே அமைச்சர் றிச்சர்ட் பத்திரன உட்பட சிலர் தடையை நீக்கி புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். இது வரவேற்கத்தக்க யதார்த்த பூர்வமான நிலைப்பாடாகும். ஆனால் இது விடயம் தொடர்பாக பொதுஜன முன்னணியின் பொதுக் குழுக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதிநிதியான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரனாவும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டியூ குணசேகராவும் புலிகள் மீதான தடை நீக்கப்படக்கூடாது என்னும் கடும் போக்கினை வெளிப்படுத்தி உள்ளனர். அது மட்டுமல்லாமல் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் புலிகள் மீதான தடை நீக்கப்படமாட்டாது அவர்கள் பயங்கரவாதிகள் தமிழ் தலைவர்களையும் வேறு பலரையும் கொண்டு ஒழித்தவர்கள் என சற்று ஆவேஷமாகக் கூறியுள்ளார்.

இந்த நாட்டில் அரசியல் படுகொலைகள் 1950 களிலேயே ஆரம்பித்தன. 1959 இல் அன்றைய பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்கா பௌத்த துறவி ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1958 ல், 1977 இல், 1983 இல், தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தப்பட்ட இனக் கலவரங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் அவர்களின் உடைமைகளுக்கும் பலத்த இழப்புகக்ள் ஏற்படுத்தப்பட்டன. அது மட்டுமல்லாமல் காலம் காலமாக தமிழ் மக்கள் தமிழ் பகுதிகளையே ஆக்கிரமிக்க சிங்களப் படையினரால் வகை தொகையற்ற படுகொலைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். வல்வெட்டித்துறை மடத்தில் மற்றும் நெடுந்தீவுக் கடலில் குமுதினிப்படகில் பச்சிளங் குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டது இரு உதாரணங்கள் மட்டுமே. இவ்வாறாக அரச பயங்கரவாதம் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருந்த நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட தலைப்பட்டதும், தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்றம் பெற்றதும் வரலாறு. மறுபுறத்தில் பழைய இடதுசாரிக் கட்சிகளாகிய லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் ஆரம்ப காலத்தில் தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதும். பின்னர் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டாட்சியில் பிரவேசித்ததுடன் குறிப்பாக தமிழ் மகக்ள் அந்தக் காட்டிக் கொடுப்பைக் கண்டு மிகுந்த ஏமாற்றமும், விரக்தியும் அடைந்தனர்.

> **பொதுஜன முன்னணியின் பொதுக் குழுக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதிநிதியான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரனாவும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டியூ குணசேகராவும் புலிகள் மீதான தடை நீக்கப் படக் கூடாது என்னும் கடும் போக்கினை வெளிப்படுத்தி உள்ளனர். அது மட்டு— மல்லாமல் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த நீதி— யமைச்சர் பட்டி வீரக்கோன் புலிகள் மீதான தடை நீக்கப்படமாட்டாது அவர்கள் பயங்கரவாதிகள் தமிழ் தலைவர்களையும் வேறு பலரையும் கொன்று ஒழித்தவர்கள் என சற்று ஆவேஷமாகக் கூறியுள்ளார்.**

தமது நம்பிக்கைக்கு பாத்திரமாயிருந்த இடதுசாரி இயக்கம் காலை வாரிவிட்ட நிலையிலும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் மாறி மாறி ஆட்சி செய்த சிங்களப் பேரினவாத ஆரசாங்கங்களால் பழைய தமிழ் தலைமைகள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு தமிழ் மக்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டம் பாழடிக்கப்பட்ட நிலையிலேயே ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. இதற்கு அரச பயங்கரவாதமும் பழைய இடதுசாரிகளின் காட்டிக் கொடுப்புமே காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் பழைய இடதுசாரிகளின் வாரிசுகள் ஆகிய பட்டி வீரக்கோன் திஸ்ஸ விதாரன டியூ குணசேகர சந்தர்ப்பவாத சகதிக்குள் விழுந்து வரலாற்றறை மறந்து தத்தம் நெஞ்சைத் தட்டிப் பார்க்காமல் ஏதேதோ எல்லாம் கூறி வருவது மிக துர்ப்பாக்கியமானதாகும்.

இதனிடையில் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப் பிரச்சினையைத் திர்ப்பதற்கு தனது கட்சி ஆதரவு வழங்குமென கூறி வந்துள்ளார். ஆனால் ஒற்றை ஆட்சி முறைமையின் கீழேயே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறார். இது தென்னை மரத்தில் புல் பிடுங்க ஏறியவனின் கதையாக உள்ளது. ஒற்றையாட்சி முறைமையின் கீழ் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடையாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ள விடயம்.. இதனிடையில் ஐ. தே. க. விற்குள் அண்மைக்காலம் தொட்டு அதிகாரப் போட்டிகள் தலைதூக்கி வந்தள்ளன. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அகற்ற வேண்டும் என்றளவிற்கு உட்பூசல் கிளம்பியது. பிரதித்தலைவர் கரு ஜெயசூர்யாவை தலைமைப் பதவிக்கு கொண்டு வர வேண்டும் என்ற நிலைப்பாடும் சற்று மேலோங்கி வந்துள்ளது போல் தெரிகிறது. கரு ஜெயசூரியா பேரினவாத இராணுவ சக்திகளின் பக்கம் சாய்ந்தவர். எனவே சிங்கள பௌத்த கடுத் போக்காளரின் ஆதரவை பெற்றுக் கொள்ளக் கூடியவரும், அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டியவரும் ஆவர். மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பக்கபலமாக மகிந்த மொறகொட போன்ற இளம் தலைமுறையினரும் முதன்மைப்படுத்தப்பட்டு வருகின்றனர். எது எப்படியிருப்பினும் ஐ. தே. க. வினாலும் ஒரு போதும் தேசிய இனப்பிரச்சினைக்குத் திர்வு காணமுடியாது என்பது வெள்ளிடை மலை. ஐ.த. க. வில் நிண்ட கால முக்கியத்தராகிய முன்னாள் கொழும்பு நகர முதல்வர் கே. கணேசலிங்கம் சில வருடங்களுக்கு முன் அக்கட்சியை விட்டு விலகியது தெரிந்தே. இன்று ஐ. தே. க. வுக்கள் உள்ள மூத்த உறுப்பினர்கள் சிலர் கூட கட்சியின் போக்குகள் பற்றி மிகுந்த விரக்திக்குள்ளாகியிருப்பதைக் காண முடிகிறது. ஆனால் அண்மைக்காலத்தில் ஐ. தே. க. வுடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ள ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன் போன்றோர் பட்டம் பதவிக்காக சந்தர்ப்பவாத அரசியல் நடத்திக் கொண்டிருப்பதையிட்டு தமிழ் பேசும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்பதையும் கூறி வைக்க வேண்டும்.






**1. ஶ்ரீ ல. மு. க தலைவர் ரவூப் ஹக்கீம் பொது ஜன முன்னணி அரசாங்கத்திலிருந்து வெளி—யேற்றப்பட்டதையடுத்து ஏற்—படப்போகும் விளைவுகள்?**

பாராளுமன்றத்தில் அது ஒரு நெருக்கடிக்கு வழிசமைக்கும். ஜனாதிபதி சந்திரிகா பெரிய சங்கடத்தில் மாட்டுப்பட்டிருக்கிறார். மாவனல்ல சம்பவத்தினை முடுக்கி விட்ட அமைச்சர் மஹிபால ஹேரத் போன்றவர்கள் பாதுகாப்பான அரவணைப்பில் வீற்றிருக்க அதனை கடுமையாக எதிர்த்தவர்கள் தண்டிக்கப்படுவது தான் நடந்தேறியுள்ளது இப்போது சந்திரிகா இனவெறி சக்திகளுடனும் வலதுசாரிகளுடனும் கைகோர்த்து முன்னேற முயல்கிறார்.

**2) சந்திரிகா அரசாங்கம். நோர்வேயின் அனுசரணையாளர் எரிக் சொல்ஹெயிமை எதற்காக ஓரம் கட்டியது?**

இதுவும் இனவெறிக் கும்பல்களின் அழுத்தம் காரணமாகவே நிறைவேற்றப்பட்டுள்ளது. சிஹல உறுமய தான் ஆரம்பத்திலேயே சொல்ஹெயிம் விரும்பத்தகாதவர். புலிகளின் உளவாளி என்று கூறிவந்ததை அரசாங்கம் காலம் கடந்தாயினும் உணர்ந்து விட்டது என அறிக்கை விடுத்தது. ஏன், ஜே. வி. பி.யும் இவ்வாறான கருத்தினையே வெளியிட்டுள்ளது.

**3) தமிழ்க் கட்சிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் அரசாங்கம் வடக்கு கிழக்கிலும் சனத்தொகை கணிப்பீட்டினை மேற்கொள்வதற்குக் கங்கணம் கட்டி நிற்கிறது. உங்கள் அபிப்பிராயம்?**

அங்கே சனத்தொகை கணிப்பீடு பூர்த்தியாக்க முடியும் என எண்ண முடியாது. அது இந்த அரசாங்கத்தின் மேலும் ஒரு துரோகச் செயலாகும்.

**4) புதிய கல்முனை மாவட்டம் ஒன்றினை அமைப்பதற்கான கோரிக்கைக்கு சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது விடயமாக உங்கள் கருத்து யாது?**

கல்முனை மாவட்டம் அமைப்பதானது ஒரு தனிவேறான நடவடிக்கையல்ல. தேவை ஏற்பட்டால் பல புதிய மாவட்டங்கள் அமைக்கப்படுவதுண்டு. நிர்வாக முறையடங்கிய இந்த விடயத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பது அர்த்தமற்றதாகும்.

**5) பொதுஜன முன்னணி அரசாங்கம் நிலைத்திருக்க கூடியதாயிருக்குமா?**

ஐ. தே. க. வில் உள்ள இனவெறியர்கள் சிலர் கைகொடுத்தால் ஒழிய நிலைமை இருள் சூழ்ந்ததாகவே உள்ளது. சிலர் ஐ.தே.க விலிருந்து வெளியேறி பொ.ஜ.மு. அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுக்கக்கூடும். ஜனதா விமுக்தி பெரமுனைகூட இதைச் செய்யலாம்.

**6) மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா அவுஸ்திரேலியாவுக்கு உயர் ஸ்தானி—கராக நியமிக்கப்பட்டுள்ளார். இதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

இது இனவெளிக் கூட்டத்திற்கு வழங்கப்பட்ட மேலும் ஒரு கப்பம் ஆகும். அவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்த போதும் அவருக்கு சகல பலத்தையும் வழங்கி மீண்டும் வடபகுதி யுத்த முனைக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பெரிதும் விரும்பியிருந்தார். அரசியல் காரணங்களுக்காக இது நிறைவேறாத போதும், இராணுவ பேரினவாதத்திற்கு இடம் கொடுத்து அவரை பலப்படுத்த முயல்வதையே இது காட்டுகிறது.

**7) சுவீடனின் கொத்தன்பேர்க் துறைமுக நகரில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலிருந்து உலகம் எதனை அறியக் கூடியதாயுள்ளது?**

ஏகாதிபத்தியம் முதலாளித்துவ உலகமயமாக்கலை முன்னெடுத்து உலகத் தொழிலாளர்களையும் வறிய மக்களையும் வாட்டுவதற்கு மேற்கொண்டு வரும் முயற்சியை விடமுடியாது என்ற போராட்டத் தொடரின் கொத்தபேக்கில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமானது மிக காத்திரமானது ஆகும். அமெரிக்காவில் சியற்றலில் ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டம் சுவிட்சலாந்து, அவுஸ்திரேலியா, கனடா (கியூபெக்) பிறேசில் போன்ற நாடுகளிலும் சங்கிலித்தொடராக இடம் பெற்றுள்ளன. உலகெங்கணும் உள்ள அடக்கியொடுக்கப்படும் மக்கள் துணிந்து எழுவதற்கு கொத்தன்பேர்க் ஆர்ப்பாட்டம் மேலும் ஒரு மைல் கல்லாக அமைகிறது.

**8) விசம் போல் ஏறிக் கொண்டிருக்கும் தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு காரணமாக தொழிலாளி வர்க்கமும் பரந்து பட்ட மக்களும் புழுங்கிக் கொண்டிருக்கின்றனர். எந்த மட்டில் ஒரு கிளர்ச்சி நிலை தோன்றும்?**

தொழிலாளர்கள் ஒரு அரசியல் தலைமையின்றியே தவிக்க வேண்டியுள்ளது. இடதுசாரிகள் பொ. ஜ. முன்னணியோடு ஒட்டிக் கொண்டிருப்பது ஒரு சாபக்கேடு. ஜே. வி. பி. ஒரு இடதுசாரி வேடதாரியாகவே செயற்படுகிறது. அரசியல் ரீதியான தலைமை வழங்கப்படாதவரை பெரியளவிலான போராட்டங்கள் வெடிக்கும் என்பதற்கில்லை.

**9) உத்தேச நம்பிக்கையில்லா பிரேரணை மீது பொ. ஜ. முன்னணி அரசாங்கம் தோல்வியைத் தழுவினால் ஐ. தே. க. யால் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தினை அமைக்க முடியுமா?**

இல்லை ஐ. தே. க. ஒரு அரசாங்கத்தினை அமைப்பதாயின் அது ஜனாதிபதியின் பிரகடனம் செய்யாத ஒப்புதலுடனேயே சாத்தியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் நவீன காலனித்துவம்

அறிவியல் அதிக அளவில வளர்ந்து வரும் காலம் இதுவாகும். தகவல் தொழில் நுட்பம் உலகின் எந்த ஒரு மூலை முடுக்கோடும் ஒரு நொடியில் தொடர்புகொள்ள முடியும். யுத்தம் சம்பந்தமான விடயங்களும் அதேபோலத்தான். ஆனால் மிஞ்சுவது சுடுகாடு என்பது இந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கு தெளிவான விடயமாகும். இதனால் பல்வேறு தந்திரோபாயங்களை ஏகாதிபத்தியங்கள் கையாள்கின்றன. அதற்கு அவர்கள் உலகமயமாக்கல் என நாமமிட்டுள்ளனர்.

இரண்டு யுத்தங்களின் பின் காலனித்துவ அல்லது குடியேற்ற நாடுகளின் செல்வங்களை சூறையாடிச் சென்ற ஏகாதிபத்தியங்கள் அதனைக் கொண்டே மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டும் நடவடிக்கையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றனர். இதற்கு ஐக்கியநாடுகள் சபை, உலக வங்கி, சர்வதேச நாயண நிதி, உலக வர்த்தக அமைப்பு என்பன துணை போகின்றன. ஆட்சி அதிகார ஆசையில் மூழ்கிப் போயுள்ள மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சித் தலைவர்கள், கடன்வாங்கி கல்யாணம் நடத்துவதில் கவனமாகச் செயல்பட்டு நாட்டின் கஜானாவைக் காலி செய்து தமது சொந்த கஜானாவை நிரப்பிக் கொள்கின்றனர். இதற்கு உலக வங்கியும், சர்வதேச நாணய நிதி, உலக வர்த்தக அமைப்புக்கள் கூறும் மந்திரத்தை உள்நாட்டிலும் உச்சரிக்கின்றனர். அன்னிய முதலீடுகள் வேலைவாய்ப்பை அதிகரிக்கும், பொருளாதார வளர்ச்சி ஏற்படும், வறுமை ஒழியும், அதற்கான திறமை மிகுந்த முகாமைத்துவம் தனியாரிடம், அதாவது அன்னிய நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் உண்டு என்றெல்லாம் கூறி சொந்த நாட்டையே குட்டிச் சுவராக்கி வருகின்றனர். இந்த ஏகாதிபத்தியங்கள் திறமையான முகாமைத்துவம் தனியாரிடம் உள்ளது என்று கூறி பொதுத்துறையை அழித்து தமது வாய்க்குள் போட்டுக் கொள்கின்றனர்.

உதாரணமாக வெள்ளை ஆட்சியை எதிர்த்து எத்தனையோ தியாகங்களைச் செய்த தென்னாபிரிக்காவை மற்றும் ஆபிரிக்க நாடுகளைப் பார்த்தால் இதை நாம் தெளிந்து கொள்ள முடியும். ஒரு நாட்டின் இயற்கை வளத்தை இவ் ஏகாதிபத்தியம் எவ்வாறு கொள்ளையடிக்கின்றது எனப் பார்ப்போம்.

வறுமையைக் குறைக்கும் சர்வதேச நாணயநிதியத்தின் திட்டம் பரிந்துரையாடலின் கீழ் உலக மயமாக்கல் என்ற பெயரில் தனியாரிடம் சமூக நலன்புரித் தேவைகளை ஒப்படைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றை பல்தேசிய நிறுவனங்களின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதை செயல்படுத்துகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 12 ஆபிரிக்க நாடுகளை கொண்டு வந்துள்ளதோடு, தான்சானியா, கினிபிசவ், நிகர், ருவாண்டா ஆகிய நாடுகள் உலக வங்கியின் கடனைப் பெறவேண்டுமானால் நீர் விநியோகம் தனியாரிடம் கையளிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே தென்னாபிரிக்காவின் தலைநகரான ஜொகனஸ்போக்கில் நகரசபை சூடுயல் லியோன்ஸ் என்ற பிரான்ஸ் நிறுவனத்திடம், நீர் விநியோகத்தை கையளித்துள்ளது. இந்நீர் விநியோகத்தின் ஆரம்பத்திலேயே அலக்சாண்ட்ரா பிரதேசத்தில் ஜுகஸ்தெய் நதி தீரத்தில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றி ஒரு வரண்ட பிரதேசத்தில் குடியமர்த்தியது. அங்கு ஏற்பட்ட நீர் தட்டுப்பாட்டின் காரணமாக அப்பிரதேசத்தில் பயங்கரமான வாந்திபேதி, நோய் வெடித்தது. இது பற்றி ஏதோ நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறிய பொழுதும் அவர்கள் செய்ததெல்லாம் இரசாயன மூலம் சுத்தப்படுத்தப்படும் சில மலசல கூடங்களை பரீட்சித்தது மட்டுமே. இந்த நிறுவனம் இந்த ஒப்பந்த வேலையைப் பொறுப்பேற்ற பொழுது இம்மக்களுக்குத் தேவையான நீர் விநியோகத்தை மேற்கொள்வதாகக் கூறியிருந்தாலும், இதுவரை ஒரு குழாயைத்தானும் பொருத்தவில்லை. வாந்திபேதி என்ற கொடிய நோயின் பயங்கரத்திற்கு முகம் கொடுத்துள்ள இவ் ஆபிரிக்க மக்களை நீரை விலை கொடுத்து வாங்க முடியாததன் காரணமாக ஜோகன் பேர்க கேப்டவுன் ஆகிய நகரங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றனர். அந்த மக்கள் தமக்கு மின்சாரமா அல்லது நீரா முக்கியம் என்று தடுமாறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்களுக்குச் சுத்தமான குடி நீரைப் பெற்றுத் தருவதாகக் கூறியே கடந்த நகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று நகராட்சியைக் கைப்பற்றியவர்களுக்கு அது மறந்து போய்விட்டது. இதன் காரணமாக தென்னாபிரிக்க உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் சங்கம் (SAMWU) நீர் விநியோகம் தனியார் மயப்படுத்தப்படுவதற்கு எதிராக ஒருநாள் சோகதினத்தை அனுட்டித்தது. இருந்தும் பலன் பூஜ்யம்.

ஜெர்மனியின் வெஸ்டெக் நகர நீர் விநியோகத்தை 50% பங்குகளை இந்நிறுவனம் வாங்கி 25 வருடத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. இரண்டு வருடங்களுக்கிடையில் நீரின் விலை 64% கூடியது. வரிகள் சம்பந்தமான 60% விலையைக் கூட்டியுள்ளது.

அங்கோலாவின் தலைநகரான அக்ராவையில் 10 வாளி நீரைப் பெறுவதால் தமது ஒருநாள் சம்பளத்தில் 50% செலவிட வேண்டியுள்ளது. இந்த நிறுவனம் நீரின் விலையை அடிக்கடி கூட்டிக் கொள்வதற்கேற்பவே அங்கோல அரசு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

சுருயஸ் லியோனஸ் என்ற இந்த நிறுவனம் பாரிஸ் நகரசபையுடன் நீர் விநியோகத்திற்கான ஒரு கூட்டு நிறுவனத்தை அமைத்தது. இதன்-மூலம் நீர் விநியோகம் தனியார் மயப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக நீரின் விலையில் மடங்கு உயர்த்தப்பட்து. இதன் காரணமாக அமைதியின்மை ஏற்பட்டது. இவர்களின் கணக்கு வழக்குகளை கணக்காய்வாளர் திணைக்களம் பரிசீலனை செய்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளது. இதன் கணக்கு வழக்குகள் தெளிவில்லை, சட்டத்திற்கமைய செயல்படவுமில்லை. இவர்களது லாபம் இவர்கள் குறிப்பிட்டுள்ளதை விட இரண்டரை மடங்கு கூடுதலாகும்.

இதிலிருந்து தனியார்துறையினர் எவ்வாறு சுரண்டுகின்றனர் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். இந்த சூயெஸ், லியோனஸ் நிறுவனத்தின் தலைவர் பாரிஸ் நகரத்தின் முன்னாள் நகராதிபதியான கிறேநோபல் என்பவராவார். இவர் நீர் விநியோக ஒப்பந்தத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் லஞ்சம் பெற்றதற்கும் ஒப்பந்தத்தை பெறுவதற்கும் லஞ்சம் வழங்கி இருமுறை சிறைத்தண்டனை அனுபவித்தவராவார்.

உலகவங்கியானது மூன்றாம் உலக நாடுகளில் அடுத்த அரை நூற்றாண்டுக்கிடையில் குடிசனப் பெருக்கம் பல மடங்குப் பெருகும். மிக மோசமான நீர் தட்டுப்பாட்டை எதிர் நோக்க நேரிடும். அதன் காரணமாக திறமையான முகாமைத்துவம் உள்ள நிறுவனங்களிடம் நீர் விநியோகத்தை கையளிக்க வேண்டுமெனக் கூறியுள்ளது. அவர்களின் பரிந்துரைக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொண்டது மட்டுமே உலகவங்கி கடன் வழங்கும் என்ற அடிப்படையிலேயே இவ் வறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த உலக வங்கியின் அறிக்கையில் அடுத்துவரும் தசாப்தங்களில் பூமியின் உஷ்ண நிலை கூடும். அதனால் குடிநீர் பிரச்சினை விசுவருபம் எடுக்கும். அதனால் ஒழுங்கான முகாமைத்துவத்தின் மூலம் நீர் விரையத்தத்தைத் தடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இன்று பூமியின் உஷ்ண நிலை கூடுவதற்குக் காரணம், முதலாவது குற்றவாளி, ஐக்கிய அமெரிக்கா என்பதையும், ஜப்பான் மற்றும் தொழில்துறையில் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளே மற்ற குற்றவாளிகள் என்பதையும் இந்த அறிக்கைகள் கூறுவதில்லை.

இந்த தனியார் நிறுவனங்கள் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யும் பொழுது, விலையைக் கூட்டுவதற்கான நிப்பந்தத்தினை இரகசியமாகவே வைத்துக் கொள்கின்றன. இதனால் எவ்வித பிரச்சினையுமின்றி மூன்றாம் உலக நாடுகளின் வளங்களைச் சுரண்டும் இந்நவீன காலனித்துவத்திற்கெதிராக பொதுஜன சமூக அமைப்புக்கள் தேசிய அரசியல் சக்திகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமது லாபத்தைக் கூட்டிக் கொள்ளக் கூடியதாக இவ்வொப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன.

இலங்கையிலும் இந்நிறுவனங்கள் ஆக்கிரமிப்பை மேற்கொள்வதை பல்வேறு அமைப்புக்களும் எடுத்துக் கூறி வருகின்றன. அமைச்சர் சரத் அமுனகமவும் திறமான முகாமைத்துவம் பற்றி பேசி வருகிறார். அதன் மூலம் சீரான நீர் வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, வீண்விரையத்தையும் தடுக்க முடியும் என்றும் கூறுகிறார். நாங்கள் உலக வங்கியின் தாராளத்திற்கேற்பவே ஆடுகிறோம் என்பதை மட்டும் சொல்வதில்லை. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இதுபற்றி அவ்வளவாகப் பேசுவதில்லை. ஏனெனில் இவை எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

எமது ஜனாதிபதியும் பிரான்சின் சோரோன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். சூயெஸ் லியோனஸ் நிறுவனமும் பிரான்சின் நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் இங்கு வராது என்று எவரும் கூறுவதுமில்லை. ஆகையினால் எமது வளங்கள் ஒவ்வொன்றாக தாரைவார்க்கப்படுகின்றன. இயற்கையின் கொடையான நீரையும் தாரைவார்த்தால் எமக்கும் அதேகதிதான்.

# வலிகாமம் வடக்கு மக்களின் துயர் 11 வருடங்களாகத் தொடர்கின்றது

1990ம் ஆண்டு ஆனி மாதம் 10ம் திகதி வலிகாமம் வடக்கு மக்கள், தமது வாழ்விடங்களில் இருந்து விரட்டப்பட்டனர். இவர்கள் விரட்டப்பட்டு 11 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளது. வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெறும் யுத்தம் காரணமாக மிக நீண்டகாலம் இடம்பெயர்ந்து வாழும் நிலையில் இம் மக்கள் உள்ளனர். எந்த குறையும் இல்லாத வளம் மிகுந்த பகுதியாக காணப்படும் வலி வடக்கிற்கு ஈடாக எதைக் கொடுத்தாலும் இம்மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இன்று வலிகாமம் வடக்கு பகுதி ஒரு சர்ச்சைக்குரிய பகுதியாக மாறி விட்டது. இப்பகுதியில் வாழ்ந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கு சில அரசியல்வாதிகள் முயற்சித்து வருகின்றன. ஆயிரக்கணக்கான வருடங்களாக வாழ்ந்து வந்த மக்கள் கூட்டம் எதற்காக வேறு இடங்களில் வாழ்க்கை நடத்த வேண்டும். இலங்கை அரசு தனது இராணுவ விஸ்தரிப்புக்காகவே இம்மக்களை இங்கு குடியேற அனுமதிக்க மறுக்கின்றது. பௌதர்களுக்கு தலதா மாளிகை எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நகுலேஸ்வரம், கீரிமலை கேணி என்பன இந்துக்களுக்கு முக்கியமானதாகும். புஞ்சி பொரளையில் சிறு விகாரையைக் கூட இடிக்க முடியாமல் இருக்கும் இலங்கை அரசு வலிகாமம் மக்களை 11 வருடங்களாக தவிக்க விட்டிருப்பது எந்த விதத்தில் நியாயமாகின்றது.

பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இன்று பிரச்சினையாக இருப்பதால் பாலஸ்தீன மக்களை சைபீரியாவில் குடியமர்த்த முடியுமா? அதேபோல் தான், வலிகாமம் வடக்கு மக்களையும், அவர்களது வாழ்ந்த பூமியிலேயே வாழ அனுமதிக்க வேண்டும். இதற்கு எத்தகைய சாக்கு போக்கு சொன்னாலும் மனசாட்சியுடைய எவரும் இதை அனுமதிக்க மாட்டார்கள்.

தலைவர் செல்வநாயகத்தின் தொகுதி வலி வடக்காகவே இருந்தது. தமிழ் மக்களின் விடுதலை உணர்வை உலகிற்கு எடுத்துக் காட்ட தனது பதவியை இராஜினாமாச் செய்ததுடன் பின்பு நடைபெற்ற இடைத்தேர்தலில் அமோக வெற்றியீட்டி தமிழர் எழுச்சிக்குத் தலைவர் செல்வநாயகம் வழி கோலினார். இன்று காங்கேசன்துறை தொகுதியின் பெரும்பகுதி இலங்கை அரசால் கபளிகாரம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் விடிவுக்கு குரல் கொடுத்த தலைவரின் தொகுதியில் வாழ்ந்த மக்களையே இன்று இலங்கை அரசு பழிவாங்குகிறது.

தமிழ் மக்களின் போராட்டம் நியாயமான போராட்டமாகும். நீதியான போராட்டமாகும். இதில் விட்டுக் கொடுப்பதற்கு எதுவுமே இல்லை. விட்டுக் கொடுக்கும் நிலையிலும் அவர்கள் இல்லை.

தனது இராணுவ நலனுக்காகவே வலி வடக்கு மக்களை மீண்டும் அப்பகுதியில் குடியேற இலங்கை அரசு மறுத்து வருகின்றது. இந்த சூழ்நிலையில் வலி வடக்கு மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த எடுக்கும் அபிவிருத்தி நடவடிக்கையானது, இலங்கை அரசுக்கு நற்சாட்சிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கையாகவே அமையும்.

இன்று வலி வடக்கை விழுங்கிய இலங்கை அரசானது நாளை யாழ் நகரத்திலும் இதைச் செய்யும். இப்படியாக வடக்கு கிழக்கு முழுவதிலும் தனது விஸ்தரிப்பை வலுப்படுத்தும்.

தமிழ் தேசிய எழுச்சியை முறியடிக்க காத்திருக்கும் பேரினவாத சக்திகளுக்கு, வலி வடக்கு மக்களின் மீளக் குடியமரும் போராட்டம் சவால் நிறைந்ததாக இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# நிகழ்காலம் துக்ககரமானது என்றால் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாயுள்ளது.



**2001 சித்திரை 5ம் திகதி ஹவானாவில் நடைபெற்ற பாராளுமன்ற சங்கத்தின் 105வது மகாநாட்டில் கியூபா ஜனாதிபதி பிடெல் கஸ்ட்ரோ ஆற்றிய உரையிலிருந்து.......**

அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளுக்கும் முன்னர் அந்நிய ஆட்சியிலிருந்த, நூற்றாண்டுகளாக விடாப்பிடியாக சூறையாடப்பட்டு வந்த நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி அகண்ட வண்ணம் இருந்ததான புள்ளிவிபரங்களுடன் எடுத்துரைத்தபோது, "நிகழ்காலம் துக்ககரமான தென்றால் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாயுள்ளது." என கூறி வைத்தேன் அது சற்று மிகையானதாக தோன்றியிருக்கலாம்.

பொய், புரழி நிறைந்த போலிப்பிரசார விற்பன்னர்கள் இன்று கையாண்டு வரும் புதிய வார்த்தைப்பிரயோகங்களைக் கொண்டு எம்மை ஏமாற்ற முடியாது. அவர்களுக்கு ஜனநாயத்திலோ, மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதிலோ எள்ளளவும் எண்ணம் கிடையாது. பின்வரும் புள்ளி விபரங்களைப் பாருங்கள்

1. 3வது உலக வெளிநாட்டுக்கடன்
   1981 அ.டொ 500 பில்லியன்
   2000 அ.டொ 2.1 டிறில்லியன்
2. லத்தீன் அமெரிக்காவுக்கான வருடாந்த தொகை
   1981 அ.டொ. 255,188 பில்லியன்
   2000 அ.டொ 785,855 மில்லியன்
3. 3வது உலக நாடுகள் வருடாந்தம் கடன் இறுக்கும் தொகை
   1981 அ.டொ. 44.2 பில்லியன்
   2000 அ.டொ 3.461 பில்லியன்
4. போசாக்குக் குறைந்த மக்கள் (ஏறத்தாழ எல்லோரும் 3வது உலகத்தவர்கள்)
   1981 அ.டொ 570 மில்லியன்
   2000 அ.டொ 800 மில்லியன்
5. வேலையற்றோர் தொகை
   1981 அ.டொ 1.103 மில்லியன்
   2000 அ.டொ 1.6 பில்லியன்

மேலும் 1978ல் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அமெரிக்க டொலர் 8070 ஆக இருந்த ஆள்வீத வருமானம் 1998ல் அமெரிக்க டொலர் 29,870 ஆக உயர்ந்தது. மறுபுறத்தில் வருமானம் குன்றிய நாடுகளில் அது 1998ல் அமெரிக்க டொலர் 200 ஆக இருந்து 1998ல் அமெரிக்க டொலர் 530 ஆக மட்டுமே உயர்ந்தது. இது ஒரு அண்டவெளி வித்தியாசம் என்றே கூற வேண்டும்.

உலக சனத்தொகையில் ஆகக் கூடுதலான செல்வந்தர்களின் 20% மானோர் தத்தம் சுய நுகர்வுக்காக 86% பணத்தினை செலவு செய்யும் அதேவேளை மிக வறிய 20% மானோர் 1.3% பணத்தினை மட்டுமே செலவு செய்கின்றர். 1960 ல் உலகின் செல்வந்த நாடுகளில் 20 வீதமான மக்களில் வருமானம் மிக வறிய நாட்டு மக்களின் வருமானத்தைக் காட்டிலும் 30 மடங்கு அதிகமாகவிருந்தது 1977ல் இது 74 மடங்காக பெருகியுள்ளது. உலக சனத்தொகையில் மிக செல்வந்தமாக விளங்கும் 25% ஆனோர் 45% ஆன இறைச்சியையும் மீனையும் நுகர்கின்றனர். அதேவேளை உலகில் காணப்படும் ஆக வறிய மக்களில் 25% மானோர் இவற்றில் 5 வீதத்தையே நுகர்கின்றனர்.

80 கோடி இளைஞர்கள் கல்வி அறிவு அற்றவர்களாக இருக்கின்றனர். இவ்வாறிருந்தும் எமது நாட்டில் குறிப்பிடத்தக்களவு (9ம் தரம்) முன்னேற்றம் கண்டுள்ளோம். இன்று பட்டதாரிகள் கூட தாம் சார்ந்திராத துறைகளில் அறிவு அற்றவர்களாக இருப்பதால், பரந்து விரிந்த அறிவை எல்லோரும் பெறும் முகமாக நாம் ஒரு எல்லோருக்கும் உரிய பல்கலைக்கழகம் ஒன்றினை அமைத்துள்ளோம்.

80 கோடி மக்கள் பட்டினியின் பிடியில் சிக்கியுள்ள அதேவேளை அவர்களுக்கு சுகாதார சேவையும் கிடையாது. எனவே தான் 50 கோடிக்கு மேலானோர் 40 வயதுக்கு மேல் வாழ்வது முடியாத காரியமாகி விட்டது.

1987ல் வானிலை மாற்றம் பற்றியோ, எயிட்ஸ் நோய் பற்றியோ, அனேகர் அறிந்திருக்கவில்லை. இன்று இவை ஏற்கனவே குறிப்பிட்ட பிரளையங்கள் போல் உருவெடுத்து விட்டன. 1981ல் உலக சனத்தொகை ஏறத்தாழ 4.5 மில்லியன் ஆக இருந்தது. அவர்களில் 75 வீதமானோர் மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்த மிக வறிய மக்கள் ஆவர். இன்று 2001ல் சனத்தொகை 6.1 மில்லியனாக உயர்ந்துள்ளது. எனவே ஒரு 20 வருட காலத்தில் உலக சனத்தொகை ஆனது 1.7 பில்லியன் அதிகரித்துள்ளது. மனித இனம் தோன்றி காலம் முதல் 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இவ்வளவு சனத்தொகை பெருக்கம் ஏற்பட்டது இல்லை. அடுத்து ஒன்றரை நூற்றாண்டிற்கு முன் 36 வீதமாக இருந்த இன்றைய மூன்றாம் உலக நாட்டு மக்களின் வருமான விகிதாசாரம் இன்று 15 வீதமாக குறைந்துள்ளது. கியூபா ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து மீண்ட பின் அமெரிக்கா ஆதிக்கம் ஆரம்பமானது. கியூபாவிற்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதார யுத்தம் 42 வருடமாக நீடித்துள்ளது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின் எமக்கு சந்தைகளும் வளங்களும் அற்றுப்போயின. இதன் பின்பு அமெரிக்கா தனது பொருளாதாரத் தடையை இறுக்கியது. அத்தோடு கியூபாவின் கதை முடிந்து விட்டது என்று பலர் எண்ணினர் ஆனால் கியூபா தனக்கு அதிக பலமும் இறைமையும் உண்டு என்பதைக் காட்டியுள்ளது. அவர்கள் தமது நாசகார திட்டத்தைத் திணிக்க முயன்று கொண்டு இருக்கையில் அது எமது நாட்டில் நாட்டுப் பற்று சமூகநீதி உண்மையான சமூக வாய்ப்பு மற்றும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவு மனித விழுமியங்கள் யாவும் வளர்ச்சி பெற்று விட்டது.

கல்வி விளையாட்டுத்துறை வைத்தியம் கலை காலாச்சார வளர்ச்சியைப் பொறுத்தவரை கியூபா பெரிய சாதனை புரிந்துள்ளது என்றே சொல்லலாம் இன்று எம் மத்தியில் 250 ஆயிரம் கல்வியாளர்கள் வைத்திய கலாநிதிகள் மற்றும் 34 ஆயிரம் உடற்கல்வி தொடர்பான பேராசிரியர்கள் போன்றோர் இருக்கின்றனர். இந்த பெரிய மனித மூலதனத்தினை நாம் ஒரு சதமேனும் அறவிடாமல் மூன்றாவது உலக நாடுகளோடு பகிர்ந்து வருகிறோம். எமது நாட்டில் 42 வருட காலத்தில் ஒரு தடவையாவது மக்களுக்கு எதிராக கண்ணீர் புகை கூடப் பிரயோகிக்கவில்லை. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் என்ன நடக்கிறது என்பதை யாவரும் அறிவர். அண்மையில் சியற்றில் போராட்டத்தில் மக்கள் அடித்து உதைக்கப்பட்டதையும் இழுத்துச் செல்லப்பட்டதும் மக்கள் அறிவர். கியூபாவில் ஒருவராவது காணாமல் போனதோ சித்திரவதை செய்யப்பட்டதோ கிடையாது. ஒருவராவது அரசியல் படுகொலை செய்யப்பட்டதும் கிடையாது. கியூபாவை முற்றாக அழித்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் விரத்தியும் பிரதேசிக் குணமும் கொண்ட இராச்சியத்திலிருந்து கிளம்பும் பச்சை பொய்களை யாரும் நம்பத் தேவையில்லை. அங்கோலாவிற்கு ஆதரவாக எமது 40 ஆயிரம் வீரர்கள் அங்கோலாவின் 30 ஆயிரம் வீரர்களோடு இணைந்து செயற்பட்ட போது அன்றைய இனவெறி பிடித்த தென்னாபிரிக்கா அரசு கொட்டிய குண்டுகள் பற்றி நேற்றோவும் அமெரிக்காவும் அறிந்திருந்தும், அவர்கள் வாய் திறக்கவில்லை. எமது படைகள் அழியட்டும் என்று எண்ணினார்கள். தற்போது அமெரிக்கா நிர்வாகம் பல தாந்தோன்றித்தனமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது உலக பொருளாதாரம் எதிர்நோக்கும் சிக்கல்களையும் அமெரிக்க பொருளாதாரம் வீழ்ச்சி நிலையை எதிர்நோக்கும் இக்காலகட்டத்தில் கடுமையான பாதிப்புக்கள் ஏற்படப் போகின்றன.

அண்மையில் ஏற்பட்ட நிகழ்வுகளைக் கவனிப்போம். ஒன்று ஏவுகணைத் தடை ஒப்பந்தத்தினை மீறி அணு ஆயுதப் போட்டிக்கு வித்திடும் வகையில் அணு ஆயுத ஏவுகணை பாதுகாப்பு உருவாக்குதல் பற்றிய தீர்மானம் இரண்டு பலஸ்தீனர்களின் பாதுகாப்புக்கு உதவும் முகமாக ஒரு படை உருவாக்குவதற்கான நகல் பிரேரணையை நிராகரித்தமை. 1990 வைகாசி முதல் பலஸ்தீன ஸ்ரேல் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா ஐந்து தடவைகள் தமது "வீட்டோ" அதிகாரத்தைப் பயன்படுத்தியது. 1972 முதல் 23 தடவைகள் இது விடயமாக இதே அதிகாரத்தைப் பாவித்து விட்டது. தற்போதைய அதிதீவிர வல்லரசாகிய அரசாங்கம் இஸ்ரேலில் பதவியேற்றபின் அமெரிக்கா கடைசியாக கையாண்ட வீட்டோ நடவடிக்கையை நிலமை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

மூன்றாவதாக 1977இல் கொயோட்டோவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சீதோசன மாற்றம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மகாநாட்டில், 34 கைத்தொழில் மாகாநாடுகள் 2012 அளவில் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை ஐந்து தசம் 2 வீதத்தால் குறைப்பதாகவும், அமெரிக்கா 7 வீதத்தால் குறைப்பதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அமெரிக்கா தான் ஏற்றுக் கொண்டதை ஒருதலைப் பட்சமாக நிராகரித்துள்ளது. இது உலக அபிராயாகத்திற்கு கிடைத்த பெரிய அடியாகும்.

நாலாவது குறிப்பாக ருசியாவிற்கும் சீனாவிற்கும் எதிராக முன்னைய பனிப்போர் காலத்தில் விடுக்கப்பட்டது போன்ற தொனியில் அறிக்கைகள் வெளியிடுதல் முழுமையான மேலாதிக்கத்தை நோக்கிய மனோபாவம் மற்றும் நேட்டோ சமாதானத்திற்கு மாறாக மேன்மேலும் அணுஆயுத பரம்பலை விஸ்தரித்து செல்லுதல். இத்தகைய நடவடிக்கையில் தற்போது அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருப்பவரின் தனி தன்மைகளை எடுத்துக் காட்டுகின்றன.

கியூபாவின் உல்லாசப்பயணத்துறையை பாழாக்குவதற்கும் மற்றும் என்னை கொலை செய்வதற்கும் கூட அமெரிக்கா பல தடவைகள் முயன்றது. குறிப்பாக பனாமா பல்கலைக்கழகத்தில் நான் உரையாற்றச் சென்ற போது வைக்கப்பட்ட குண்டு முயற்சி வெற்றியளித்திருந்தால் நானும் ஆயிரம் மாணவர்களும் மாண்டிருப்போம். மேலும் மியாமிமை தளமாகக் கொண்டுள்ள பயங்கரவாதக் கும்பலும் அமெரிக்காவின் தீவிரவாத வலதுசாரிகளும் கியூபாவை சீர்குலைத்து சின்னாபின்னம் ஆக்குவதற்கு என்றும் முயன்ற வண்ணம் உள்ளனர். இந்த மாகா நாட்டை முறியடிப்பதற்கு கூட அமெரிக்கா கேவலமான திட்டங்களை வைத்திருந்தது. கியூபாவில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. 1998 இல் பாப்பரசர் மேற்கொண்ட விஜயத்தின் பின் நிலமையில் முன்னேற்றம் ஏற்படும் என்று பலர் எண்ணியிருந்தபோதும் அது படுமோசமாகி விட்டது என பொய் பொய்யாய் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

42 வருட காலமாக எம்மைத் திணற வைப்பதற்கு அமெரிக்க நிர்வாகம் மேற்கொண்ட பல்வேறு யுக்திகள் பலிக்கவில்லையே என அவர்கள் விரக்தியடையும் பரிதாக நிலையும் இருக்கத்தான் செய்கிறது. நாங்கள் அதைப்பார்த்து சிரிக்காமல் வேறு என்ன செய்யலாம். கியூபாவில் மனித உரிமை மீறல்கள் நிலவுகின்றன என பழி சுமத்துபவர்கள், என்மீது பொருளாதார தடை வித்தவர்கள் தமது கையாட்கள் ஆட்ஜன்ரீனாவில் அல்லது சில்லியில் ஆட்சி செய்தபோது அரங்கேறிய இனக்கொலை வெறியாட்டங்களுக்கு எதிராகத் தடைகள் விதித்தார்களா?

படிப்பகம்

www.padippakam.com






# அவன் கதி



வெள்ளவத்தைக் கடற்கரைப் பகுதியில் அன்று மாலை வழமைபோல் சனக்கூட்டமாகவே இருந்தது. மாணவப் பருவத்தை உடைய இளைஞர்களும் ஆங்காங்கே கிறிக்கட் விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தப் பருவத்தைத் தாண்டிய இளைஞர்கள் சிறு சிறு குழுக்களாகக் குழுமியிருந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். இவர்களின் பேச்சில் கனடா, சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகளின் பெயரும் விசா என்ற சொல்லும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தன. இடையே சில பெண் பிள்ளைகளின் பெயரும் பேச்சில் இடம்பெற்றது. இவற்றுக்கு மத்தியில் ஒரு குழுவில் இருந்த சிவமோகனைக் கேலி செய்வதிலும் கரிசனையாக இருந்தனர்.

சிவமோகன் பிரபல கிராமசேவகர் சதாசிவத்தின் கடைசிப் பிள்ளையாவார். சதாசிவம் கிராமசேவகர் என்று சொல்லப்பட்டாலும் ஊரில் உள்ள அனேகர் அவரை விதானையார் என்றே அழைத்தனர். விதானை சதாசிவத்திற்கு ஒன்பது பிள்ளைகள். தனது தில்லு முல்லு நடவடிக்கையால் குடும்பத்தை நடாத்திய சதாசிவம் அத்தகைய நடவடிக்கைகளைக் கையாண்டு எட்டுப் பிள்ளைகளையும் ஒருவழியாக கரை சேர்த்து விட்டார். திருமணம் முடித்த பிள்ளைகளில் ஒருவர் கூட சதாசிவத்துடன் உறவு வைத்துக் கொள்ளவில்லை. தாங்கள் உறவு வைத்தால் தங்கள் குடும்பத்தையும் அப்பா அடைவு வைத்து விடுவார் என்ற பயமே இதற்குக் காரணம். மிகவும் கெட்டு நொந்த நிலையிலேயே சதாசிவம் கொழும்பு வந்து சேர்ந்தார். சிவமோகனை நல்ல விலைக்கு விற்பதே சதாசிவத்தின் தற்போதைய குறியாக இருந்தது.

கடற்கரையில் சிவமோகனைச் சுற்றியிருந்த இளைஞர்களில் ஜெகன் சிவமோகனைப் பார்த்து சிவா! கொப்பர் உன்னைக் கொண்டே மாட்டப்போகின்றார். என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டான். என்ன மச்சான் செய்கிறது என்ரை தலையெழுத்து அது என்றால் என்னால் என்ன செய்ய முடியும்? இதற்கு மற்றொருவனான சுரேஸ் அப்படியென்றால் நீ மாலினியை என்ன செய்யப் போகின்றாய்? எனக் கேட்டான். அதுதான் மச்சான் யோசிக்கப் பயமாக இருக்கின்றது. அப்பர் அம்மாவிடம் இதைப்பற்றிச் சொன்னால் உயிரை விடப் போகின்றோம் என்பார்கள். என்னை நல்ல சீதனம் வாங்கி கலியாணம் செய்து கொடுக்கவே அவர்கள் விரும்புகிறார்கள். இதற்கு ஜெகன் அப்ப கொப்பர் உன்னை கொண்டு போய் எங்கேயோ தள்ளப் போகின்றார் என்று சொல்லேன் என்றான். ஜெகன் சொன்னதைக் கேட்டவுடன் எல்லோரும் பலமாகச் சிரித்தனர். அந்நேரம் சிவமோகனிடம் சுரேஸ் சிவம் உன்னை கொப்பர் கூப்பிடுகின்றார் என்றான். வெள்ளை வேட்டியும் சேட்டும் அணிந்திருந்த சதாசிவத்தைக் கண்டால் யாரும் அச்சப்படுவார்கள். அவ்வளவு உயரமும் பருமனும் உடையது அவரது தோற்றம். தகப்பனைக் கண்ட சிவமோகன் தலைதெறிக்க தகப்பனிடம் ஓடினான். உன்னை வீட்டிற்கு உடனே வரட்டாம் என்று சொல்லிவிட்டு சதாசிவம் நடக்கத் தொடங்கினார். தகப்பனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்ட சிவமோகன் நண்பர்களுக்குக் கூட எதுவும் சொல்லாமல் ஓட்டமும் நடையுமாக வீடு போய்ச் சேர்ந்தான்.

சிவமோகன் சென்றதும் அவனைப் பற்றியே அவனது நண்பர்கள் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர் மச்சான் சதாசிவத்தார் மூத்த மகளுக்கு எஞ்சினியரைக் கலியாணம் செய்து, வைத்து கதை தெரியும் தானே என்றான் ஒருவன். ஓ! கள்ள உறுதி காட்டித்தானே செய்து வைத்தவர் என்றான் மற்றொருவன். ஏன் சிவமோகன் இரண்டாவது அண்ணைக்கு போமன் என்று சொல்லித்தானே கலியாணம் செய்தவர் என்று சொன்னான் சுரேஸ். கொஞ்ச நாளாய் அந்தக் குடும்பம் பிரிந்திருந்தது. உனக்கு தெரியும் தானே என்றான் ஜெகன். ஜெகனே தொடர்ந்து சொன்னான், சதாசிவத்தார் குடும்பத்திலை கலியாணம் முடித்துப் போன ஒரு பிள்ளை கூட சதாசிவத்திட்டை திரும்பி வந்து உறவு கொண்டது என்பது கற்பனையில் கூட நடக்காத ஒன்று. இந்த நேரம் சுரேஸ், மச்சான் நான் நினைக்கிறேன் சிவமோகனை சதாசிவத்தார் எங்கேயோ செற் பண்ணிவிட்டார். அல்லது போனால் இவ்வளவு தூரம் அக்கறையாக வந்து கூப்பிட மாட்டார் என்று கூறினான். இதற்கு ஜெகன் நீ சொல்வது நூற்றுக்கு நூறு சரி மச்சான். எங்களிடம் சிவமோகன் ஒரு சமயம் கொட்டகேனா பொலிசில் பிடிபட்டிருந்தபோது தகவல் தெரிந்தும் சதாசிவத்தார் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. பிறகு எங்கட அப்பர் தான் சிவமோகனை ஒருவாறு வெளியே எடுத்தவர். இன்று ஏதோ நடந்திருக்கு என்றான். இப்படியாக அவர்களின் கதை போய்க் கொண்டிருந்தது.

அப்போது சிவமோகன் அவசர அவசரமாகக் குளித்து நல்ல ஆடை அணிந்து முச்சக்கரவண்டியில் பெண் பார்க்கப் போய்க் கொண்டிருந்தான். சதாசிவம் ஒரு கரையில் மறுகரையில் தரகர் தங்கராசா, நடுவில் சதாசிவத்தார் மனைவி பராசக்தி ஆகியோர் அமர்ந்திருந்தனர். தரகர் தங்கராசாவின் மடியில் சிவமோகன் அமர்ந்திருந்தான். பெண் வீட்டிற்கு வந்ததும், தங்கராசா இவர்களை பெண்ணின் வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். பெண்ணின் தகப்பனார் என்று சொல்லப்பட்ட ஒருவர் அங்கே அமர்ந்திருந்தார். இவருக்கு உடை அணிவிக்கப்பட்டு கதிரையில் அமர வைக்கப்பட்டது போல் அமர்ந்திருந்தார். இவர்கள் நால்வரும் கதிரைகளில் அமர்ந்தனர். பெண்ணின் தாயார் முதலில் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் சதாசிவம் குடும்பத்தினர் விறைப்படைந்த நிலையில் இருக்க தரகர் தங்கராசா இவதான் பெண்ணின் தாயார் என்றார். அளவுக்கு அதிகமான ஒப்பனையுடன் அந்தப் பெண்மணி கதிரையில் அமர்ந்தார். உடனே தரகர் தங்கராசா கதையைத் தொடங்கினார். பிள்ளை! இவர்தான் பிரபல விதானையார் சதாசிவம். இவரின் மூத்த மகள் முடித்தது ஒரு பொறியியலாளரை. இரண்டாவது மகள் மாங்குளம் விதானையாரின் மகனை முடித்தது. மூன்றாவது மகன் கனடாவில் உள்ளார். அவர் முடித்தது முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் பெறா மகளை. இப்படியாக அடுக்கிக் கொண்டுபோன தரகர் தங்கராசா இறுதியில் இவரின் பிள்ளைகள் எல்லோரும் நல்ல இடங்களில் முடித்து நல்லாய் இருக்கின்றார் என்று முடித்தார். பெண்ணின் தகப்பனார் தமது பக்கம் பற்றி ஏதாவது சொல்வார் என சதாசிவம் குடும்பத்தினர் எதிர்பார்க்க, பெண்ணின் தாயாரே சொல்லத் தொடங்கினார். நான் எழுதுமட்டுவாள் விதானையாரின் சகோதரியின் மகள். இவர் துணுக்காய் சிறாப்பர் கந்தையாவின் தமையனின் மகன். எங்களுக்கு நான்கு பிள்ளைகள். மூன்று ஆண்கள். ஒரு பெண். மூவரும் கனடாவில் உள்ளனர். இதைச் சொன்னவுடனே சதாசிவம் இருக்கையில் இருந்து கொஞ்சம் நெளிவெடுத்து மீண்டும் ஒழுங்காக அமர்ந்தார். இதன் அர்த்தத்தைப் புரிந்த தரகர் தங்கராசா கண்ணால் சிரித்துக் கொண்டார். தொடர்ந்து கதைத்த பெண்ணின் தாயார் நாங்கள் எல்லோரும் கனடா போவதற்கு ஆயத்தமாக இருந்தோம். என்ரை மகளுக்கு இருபத்திரண்டு வயதானபடியால் தூதரகம் விசா தர மறுத்து விட்டது. படியன்கள் சொல்லிச்சினம் நல்ல கலியாணமாகப் பேசுங்கோ சகோதரியையும், மச்சானையும் நாங்கள் முகவர் மூலம் கூப்பிடுகின்றோம் என்று. உங்கடை பிள்ளையின் குறிப்பு பொருந்தியிருக்கின்றது. இனி மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்கட்டும். பிறகு முடிவு செய்வோம் என்றார். இவ்வளவையும் கேட்ட சதாசிவத்தார் உந்தக் கலியாணத்தை விடக்கூடாது என மனதுக்குள் முடிவு பண்ணிக் கொண்டார். உடனே இஞ்சை பாருங்கோ, எங்கடை பிள்ளையிட்டை ஒரு தடியை காட்டி இதற்கு நான் தாலி கட்டச் சொன்னால் அதற்கு தாலி கட்டும் என்றார். இவ்வளவுக்கும் சிவமோகன் குனிந்த தலை நிமிராமல் நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். இந்த நேரம் பார்த்து தரகர் தங்கராசா பிள்ளையைக் கூட்டி யாருங்கோ என்றார். அப்போது வயது முதிர்ந்த பெண்மணி பிள்ளளையைக் கூட்டி வந்தார். பிள்ளை பால் கோப்பி கொண்டு வந்து எல்லோருக்கும் பரிமாறினார். சிவமோகனிடம் வரும்போது, எடுங்கள் ஏன் வெட்கப்படுகிறீர்கள் என்றாள். சிவமோகனுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் படக்கென்று கோப்பியை எடுத்துக் கொண்டான். உடனே பெண்ணின் தாயார் எங்கட பிள்ளை வெளிப்படையாகக் கதைக்கும் சுபாவம் கொண்டது. இந்த இடத்தில் இருக்கும் எல்லோருக்கும் சுபா என்றால் தெரியும் என்றார். உடனே பிள்ளையை உள்ளே போகும்படி தங்கராசா கூறினார். இந்தநேரம் அங்கிருந்த வயது முதிர்ந்த பெண்மணி எங்கடை காலத்தில் இப்படியெல்லாம் இல்லை. நாங்கள் வீட்டுக்குள் இருந்து வெளியே வரமாட்டோம் என்றார். இந்த நேரம் பெண்ணின் தகப்பனார் இப்பவெல்லாம் பெண் ஆட்சிதானே என்றார். உடனே பெண்ணின் தாயார், அப்பா! என்றார் கொஞ்சம் அதட்டலாக. அத்துடன் அவர் அடங்கி விட்டார். இவ்வேளை சதாசிவத்தாரும் யார் இந்தக் கிழடு. சிவபூசைக்குள் கரடி புகுந்தமாதிரி என மனதுக்குள் சபித்துக் கொண்டார். இவரைப் பொறுத்தவரை சிவமோகனை விற்பதற்கு நல்ல ஒரு பகுதி கிடைத்து விட்டது. இதை இதுகள் குழப்பி விடுமோ என்ற ஐயம் மேலிட்டது. எனவே உசாரானார். தன் பங்குக்கு நாங்கள் வந்த விடயத்தைக் கதைப்போம் என்று விடயத்துக்கு நேரே வந்தார்.

இதற்குப் பெண்ணின் தகப்பன், இப்பதானே மாப்பிள்ளை பெண்ணைப் பார்த்து இருக்கின்றார். அவருக்கு பிடித்திருக்கோ பிடிக்கவில்லையோ, வீட்டிற்குப் போனால் தானே தெரியும் என்றார். அவரின் பேச்சை மறித்த தரகர் தங்கராசா உங்களுக்கு விதானையார் சதாசிவத்தின் போக்குத் தெரியாது. அவருக்கும் மனைவிக்கும் பெண்ணைப் பிடித்தால் பெடியனுக்கும் பிடித்த மாதிரித்தான் என்று கூறிவிட்டு என்ன சிவமோகன் அப்படித்தானே என்றார். சிவமோகனும் விழி பிதுங்கிய நிலையில் அனுங்கலுடன் ஏதோ சொல்லித் தலையாட்டினான். அங்கிருந்தவர்கள் அதைச் சம்மதம் என எடுத்துக் கொண்டனர். ஏனென்றால் இக்கலியாணம் நடைபெற வேண்டும் என்பது சம்பந்தப்பட்டவர்களின் விருப்பமாக இருந்தது. கதிரையில் இருந்து எழுந்த சதாசிவத்தார் கொஞ்ச வெற்றிலை எடுத்து வாய்க்குள் போட்டுக் கொண்டு அப்ப நாங்கள் கிளம்பட்டோமோ என்றார். இதற்குப் பெண்ணின் தாயார் நாடு இருக்கிற நிலையில் இப்பவே எல்லாம் பேசி முடித்தால் நல்லது என்றார். இதைக் கேட்ட சதாசிவத்தின் முகம் பளபளவென பிரகாசிக்கத் தொடங்கியது. அப்படியே தொப்பென கதிரையில் அமர்ந்தார். இவள் எங்கடை ஒரே ஒரு பெண்பிள்ளை எங்கடை சொத்துக்கள் எல்லாம் இவளுக்குத்தான் மாப்பிளைக்கு காசாகப் பத்து லட்சம் தருகிறோம் என முடித்தார். இதற்கு சதாசிவத்தார் என்ன தங்கராசா நான் பதினைந்து இலட்சத்திற்குத் தானே சம்மதித்தேன் என்றார். தங்கராசா இப்ப என்ன குழப்பம் எல்லாம் சரிதானே அவர்கள் பதினைந்து தருவினம் என்றார். இதற்குப் பெண்ணின் தாயார் வாயெல்லாம் பல்லாகத் தெரியும் வண்ணம் சிரித்துக் கொண்டு கொஞ்சம் என்றாலும் குறையுங்கோ என்று ஒரு செல்லக் கெஞ்சல் கெஞ்சினார். இதற்கு சதாசிவம் இப்ப எங்கடை பெடியனுக்கு கலியாணம் அவசியமில்லை. அவனைக் கொஞ்சம் கூட படிக்க வைத்தனென்றால் பிறகு அவனின் தகுதி கிட்ட நிற்க முடியாமல் ஆகிவிடும். தங்கராசா குறிப்பு பொருந்தியுள்ளது என்றதாலும், நீங்களும் இந்த கலியாணத்தில் விருப்பம் கொண்டதாலும் நான் சம்மதித்தேன் எனக் கூறிவிட்டு சால்வையை எடுத்து உதறிப்போட்டு மீண்டும் தோளில் போட்டுக் கொண்டார். உடனே பெண்ணின் தாயார் சரி தருகின்றோம் என செல்லமாக இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சதாசிவத்தார் குடும்பம் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானது. அவர்கள் எல்லோரும் எழுந்து இரண்டு மூன்று அடிகள் வைத்தவுடன் பெண் வெளியே வந்து என்ன சிவா ஒன்றும் கதைக்காமல் போறீர் என்றாள். இதைப் பார்த்து எல்லோரும் கொல் எனச் சிரித்தனர். சிவமோகன் அசடு வழிய தாயாருடன் ஒட்டிக் கொண்டு முச்சக்கர வண்டியில் ஏறினான்.

பெண் வீட்டு வாசலில் நின்ற இளைஞர்களில் ஒருவன் என்ன மச்சான் சுதாவிற்கு கலியாணமாம் எந்த பாவி மாட்டிச்சோ தெரியாது என்றான். மற்றொருவன் இவள் முன்பு கலியாணம் முடிக்கத்தானே கனடா போனாள் என்றான். இதற்கு மற்றவன் உவளுக்கு கனடாவில் கலியாணம் நடக்கவில்லை. அதற்கு முன்பே அந்த மாப்பிள்ளை பெடியன் சரியில்லை என்று திரும்பி விட்டான் என்றாள். இதற்கு மற்றொருவன் அப்ப மச்சான் கொம்மினிக்கேசன் பெடியனோடை திரிந்தாளே என்றான். அது என்னவாயிற்று என்றான் வேறொருவன். அதற்குள் நின்ற சற்று வலிமையானவன் மச்சான் இவள் திரிந்த ஆட்களை கணக்குப் பாத்தியள் என்றால் உங்களுக்கு மண்டை சிதறிவிடும். விடு போகட்டும், முடிக்கப்போற அப்பாவியை நினைத்தால் தான் கவலையாய் இருக்கு என்றான்.

வீட்டுக்குப் போனவுடன் சதாசிவத்தார் நாள் பார்ப்பதற்கு சாஸ்த்திரியிடம் போய்விட்டார். சிவமோகன் வீட்டில் மல்லாந்து படுத்திருந்தான். தாய் அவனிடம் போய், பெட்டை வஞ்சகம் இல்லாத பிள்ளைபோல் தெரிகின்றது என்றாள். அத்துடன் என்ர பிள்ளைகளுக்குள் நீ தான் கூட சீதனம் வாங்கி கலியாணம் முடிக்கின்றாய். உதுக்கெல்லாம் கொப்பருக்கு நீ பூப்போட்டு கும்பிட வேண்டும் என்றாள். தான் எது சொன்னாலும் கலவரமாகும் என்ற சிவமோகன் தலையிடி என்று கூறிவிட்டு குப்பறுபடுத்துக் கொண்டான்.

....தொடர்ச்சி 11இல்

படிப்பகம்

10ம் பக்கத் தொடர் ....



# அவன் கதி

அடுத்தநாள் மாலை சிவமோகன் கடற்கரைக்கு வரவில்லை. நண்பர்கள் ஏன் ஏது என்று விசாரிக்க வீடு வந்தனர். வாசலில் நின்ற சதாசிவத்தார் தம்பிமார் உங்கட சிவாவிற்கு வாற ஞாயிறு கலியாணம். என்ரை பிள்ளைகளுக்குள் சிவா கலியாணம் தான் சிறப்பாக நடக்கப்போகின்றது. எல்லோரும் வந்திட வேண்டும் என்றார். மாமா சிவமோகன் எங்கே என்றான் ஒருவன். இவனை நீங்கள் பிடிக்கமாட்டீர்கள் அவன் துணிக்கடைக்குப் போய் விட்டான் என்றார். சிவமோகன் திருமணம் வெள்ளவத்தை மியாமி மண்டபத்தில் நடைபெற்றது. தன்னைப் பார்த்து சிரிக்கின்ற அத்தனை பேருக்கும் சதாசிவத்தார் அழைப்பிதழ் கொடுத்திருந்தார். மண்டபம் சனங்களால் நிரம்பி வழிந்தது. புகைப்படக்காரரும், ஒளிப்பதிவுக்காரரும் ஈ மொய்க்கும் போல் மொய்த்துக் கொண்டிருந்தனர். சதாசிவத்தார் தனது நெருக்கமானவர்களை கூட்டிக் கொண்டு போய் படம் எடுப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். பெண்ணின் தகப்பனார் அப்பகுதியில் இருந்த சாராயக்கடை ஒன்றுக்கள் மெதுவாக நுழைந்தார். சிவமோகன் நண்பர்களை இரு என்று சொல்லக்கூட ஆட்கள் இல்லை. அதேபோல அங்கு வந்திருந்த அனேகம்பேரை வரவேற்க ஆட்கள் இருக்கவில்லை. வந்தவர்கள் தன்பாட்டில் உணவை அருந்திவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள். சிவமோகனின் நண்பர்கள் சொல்லிவிட்டுப் போகலாம் என்று சிவமோகனுக்குக் கிட்டப் போனபோது படப்பிடிப்பாளர்கள் அதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்ல. தொடர்ந்து படம் எடுத்துக் கொண்டே இருந்தனர். மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஒரு அறையில் உணவு அருந்தவிட்டுப் படம் எடுத்தனர். இப்படியாக பல்வேறு விதமான வினோதப் படம் எடுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எவ்வளவுக் கெவ்வளவு படம் கூட எடுக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்குப் பணம் என்பது எமக்குப் புரிவதில்லை. இதேவேளை திருமணத்திற்கு வந்த அனேகமானவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர்.

தற்போது தமிழ் மக்கள் மத்தியில் திருமணங்கள் பெரிதாக நடாத்தப்படுகின்றது. பெரும்தொகைப் பணத்தைச் செலவு செய்து நடாத்தப்படும் இத்திருமணங்களுக்கு வருகின்றவர்களை எப்படி நடாத்த வேண்டும் என்பது தெரியாமல் இருக்கின்றது. தம்மிடம் வசதியிருக்கின்றது என்பதற்காக எண்ணற்றவர்களை திருமணத்திற்கு அழைக்கிறார்கள். அழைப்பை ஏற்று திருமணத்திற்குச் சென்றால் அவர்களை வரவேற்க ஆள் இருப்பதில்லை. திருமணம் முடிந்து போகும்போது என்றாலும் தம்பதிகளிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்றால் படப்பிடிப்பாளர்களின் தொல்லையால் அது முடியாமல் போகின்றது. உண்மையில் திருமணத் தம்பதிகள் மண்டபத்தில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளக் கூடியவாறு நிற்க வேண்டும். திருமணத்தை நடாத்துபவர்களும், வரவேற்பு விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இந்நிலை இன்று எம்மத்தியில் இல்லை.

சிவமோகன் திருமணம் முடித்து ஒரு கிழமையின் பின் கடற்கரை வந்தான். நண்பர்கள் அவனை இன்முகத்துடன் வரவேற்றனர். ஆனால் சிவமோகனை விரக்தியில் பேசுபவன் போல பேசினான் அந்த நேரம் அவ்வழியால் கடலை விற்றுக் கொண்டு போனவனை சிவமோகன் அழைத்தான். கடலைக்காரனிடம் ஒரு பக்கற் சிகரெட்டை பணம் கொடுத்து வாங்கினான். அதில் ஒன்றை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு கடலைக்காரனிடமே தீப்பெட்டி வாங்கி சிகறட்டைப் பற்ற வைத்தான். நன்றாக இழுத்து புகை ஒன்றை நன்றாக உள் இழுத்து வெளியே விட்டுக் கொண்டு என்ரை வேலை உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கும் என கூறினான். என்ரை வாழ்க்கையே சரி மச்சான் அப்பர் பம்பலப்பிட்டி தொடர்மாடியில் ஒரு வீடு எடுத்திருக்கிறார். கிழடு இப்ப வேட்டி உடுப்பதில்லை. நீளக்காற்சட்டைதான் அணிகின்றார். மாலையானால் பழசுகள் கொஞ்சம் வந்து தண்ணியடிக்கினம். என்ரை மனைவி அயலவர்களுடன் கண்டி பார்க்கப் போய்விட்டாள். நான் அம்மா வீட்டை வந்திட்டு திரும்ப மனைவியின் வீட்டிற்குப் போனபோது மனைவியின் அம்மா சுதா தன் பெண்சினேகிதிகளுடன் கண்டி பார்க்கப் போய்விட்டா. உங்களுக்கும் சொல்லச் சொன்னவ என்கிறா. என்ன கர்மம் செய்தனானோ தெரியாது. தண்ணியடித்தால் ஆறுதலாக இருக்கும் போல் இருக்கு. சிவமோகனின் வார்த்தைகளைக் கேட்ட நண்பர்கள் எல்லோருக்கும் கண்கள் பனித்து விட்டன. ஒருவர் மாறி ஒருவராக பெருமூச்சு விடத் தொடங்கினர். இன்னேரம் பெருங்காற்றுடன் மழையொன்று பெய்யத் தொடங்கியது. நண்பர்கள் எல்லோரும் சிதறிப் பிரிந்தனர். சிவமோகனின் நண்பர்களுக்கு அந்தக்காற்று பெரும் பயத்தைக் கொடுத்திருந்தது. நண்பர்கள் எல்லோரும் பிரிந்த பின்பு கொட்டும் மழையில் நனைந்த சிவமோகனுக்கு சிகறட் அணைந்த பின்பு தான் சுயநினைவு வந்தது. சற்று முற்றும் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் இவனிடத்தில் இல்லை. மெதுவாக எழுந்து எங்கே போவதென்று தெரியாமல் தளர்ந்த நடையுடன் சென்று கொண்டிருந்தான்.

முற்றும்

**யாவும் கற்பனை**

— அமுதா —

# இன்று புரட்சிகர மார்க்சீய வாதம்

**— ஏனெஸ்ட் மண்டல்**

இது ஒரு மிக நெருங்கிய தொடர்புடைய கேள்வி ஒன்றை எழுப்புகிறது. இதுவரை எல்லாப் புரட்சிகளும் இடம்பெற்றது, ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கிய நாடுகளில் என்னும் கருத்துக்கு, ருசிய புரட்சி கூட ஓரளவான விதிவிலக்காகவே உள்ளது என நீங்கள் குறிப்பிட்டீர்கள். ருசிய புரட்சியில் இருந்தது மாதிரி புரட்சி என்ற மாதிரியினை, மேற்கு ஐரோப்பிய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கு புரட்சிகர இடதுசாாழி இயக்கம் அதிலும் குறிப்பாக 4 வது அகிலமானது வெறுமனே பொருத்திப் பார்ப்பது தான் வழக்கம் என்றும் குற்றச்சாட்டு அடிக்கடி முன் வைக்கப்படுகிறது. அதாவது அரசு உடைவது சோவியத் சபைகள் அமைப்பது, இருபக்க அதிகாரம், சீர்திருத்தவாதிகள் ஓரம் கட்டப்படுதல், கிளர்ச்சி செய்வதற்கு உரிய நிலைக்கு சோவியத் சபையின் அதிகாரத்திற்கும் முதலாளித்துவ அதிகாரத்திற்குமிடையிலான மோதலின் வளர்ச்சி. எவ்வாறாயினும் யதார்த்த நிலையில் சமூக இயக்கங்கள், எவ்வளவோ வேறுபட்டு இருப்பதால், இந்த போல்சவிக் திட்டத்தினை அதன்மேல் பதியச் செய்தது அர்த்தமற்றதாகும். அதாவது ஒரு நீண்ட கால கொரிலா போராட்டத்திற்கு மாவோ வாத மாதிரியை, அல்லது சேகுவரா அல்லது வியட்னாமிய மாதிரியை பதிய வைப்பது போன்றதாகும். எனவே மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ சமுதாயங்களில் உள்ள விசேடமான அல்லது குறிப்பான நிலமைக்கு அதே போன்று குறிப்பானதும் வேறுபட்டதுமான, மூலோபாயமே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்குத் தேவைப்படுகிறது. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். இங்கே பல கேள்விகள் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. முதலாவதாக நாம் ருசிய புரட்சியின், மாதிரி அல்லது திட்டம் என்பது ருசியாவுக்கு மட்டும், குறிப்பாக எது உரியது அல்லது பொதுவாகப் பார்த்தால் பொருந்தக்கூடியது என்பதை வெவ்வேறாக பார்க்கவேண்டும். பின்வருபவை ருசியாவுக்கு மட்டும் பொருந்துபவ அல்ல,

(அ)புரட்சிகர நெருக்கடியின் காலவரை

(ஆ)சோவியத் சபை என்ற வடிவத்தில் பரந்துபட்ட மக்களின் சுய அமைப்பு

(இ)சோவியத் சபைகள் போல்செவிக் வாதிகள் பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்காக கையாண்ட மந்திரோபாயங்கள்.

(ஈ) முதலாளித்துவ அரசானது, சிதைந்து அழிந்து போனதற்கான திட்டவட்டமான வடிவம்,

இது வேதாந்தவாதம் அல்ல உண்மையில் இது அரை நூற்றாண்டுக்கு மேலாக வரலாற்று ரீதியாக பெற்ற அனுபவங்களில் இந்து பெறப்பட்ட முடிவு ஆகும். நான் மேலே, குறிப்பிட்ட அம்சங்களும், மேலும் சில காரணிகளும், 1917-1923 ஜேர்மன் புரட்சியிலும், 1936-1937 ஸ்பெயின் புரட்சியிலும் 1974-75 போர்த்துக்கேய புரட்சியின் ஆரம்ப வடிவத்திலும் காணலாம். இவற்றின் ஆரம்பப சமிக்ஞைகளை 1920 ல் இத்தாலியில் இடம்பெற்ற நிகழ்வுகளிலும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இத்தாலியில் காணப்பட்ட புரட்சிகர எழுச்சியிலும் பிரான்சில் 1968 மே நிகழ்விலும் காணக்கூடியதாக உள்ளது. ஆகையால் தான் மேற்கு ஐரோப்பாவில், புரட்சிகர நெருக்கடி நிலையில் கூடுதலாக எழக்கூடிய வடிவங்கள் என்று நாம் கருதுகின்றோம். அதுபோலவே 1917 பெப்ரவரிக்கும் ஒக்டோபருக்கும் இடையில் ருசியாவில் ஜார் மன்னனின் முதலாளித்துவ இயந்திரம் பாழ் அடைந்ததை ருசிய சமூக இயக்கத்திற்கு மட்டும் பொருந்துவது என்பதற்கில்லை. மேற்கு ஐரோப்பாவில் நான் குறிப்பிட்டது போன்ற புரட்சிகர நெருக்கடி நிலைகள் மீண்டும், மீண்டும் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். ஒருவேளை வடிவங்கள் வேறுபடலாம். ஆனால் அதே மாதிரியான அல்லது அதைவிட கூடியளவு தாக்கத்துடன் அது இடம்பெற்று இருக்கலாம். எனவே 1975 இல் போர்த்துக்கலில் அடக்குமுறை சக்திகள் பெப்ரவரி ஒக்டோபருக்கு இடையில் ருசியாவில் நிலவியதை விடக் கூடுதலாக செயலற்று இருந்ததுடன், முதலாளித்துவ அரச இயந்திரமும், கூடுதலான பாழ் அடைந்த நிலையில் இருந்தது. சாதாரண காலங்களில், மேற்கு நாடுகளில் முதலாளித்துவ அரசும், சமூக ஒழுங்கு முறையும் நிச்சயமாக அதிகளவு பலமாகவும் ஸ்திரமாகவும் இருந்ததை நான் மறுக்கவில்லை. ஆனால் அத்தகைய சாதாரண நிலை என்பது பேணப்படுவதிலேயே எந்தப்பலமும் தங்கியுள்ளது. உதாரணமாக் பிரான்சில் மே 1968ல் இடம் பெற்றது போல சமூக சமாதானம் என்பது சிதறுண்டு போகும் வேளையில் அங்கே பலமாக இருந்தது, பலம் குன்றிய நிலையை எட்டுகிறது. ருசியாவை பொறுத்தவரை போல்செவிக் வாதிகள் இலகுவாக ஆட்சியை கைப்பற்றக்கூடியதாக இருந்தது உண்மையாயினும் அதுதான் அதன் விசேட அம்சம் என்று கூறுவதற்கு இல்லை. மாறாக அங்கே ஆட்சியைக் கைப்பற்ற முன்பும் அதனை அடுத்தும் ஏற்பட்ட பாரிய கஷ்டங்கள் குறிப்பிட வேண்டும் இங்கு நம்ப முடியாத விடயத்தை நான் கூறவில்லை. புரட்சிகர மார்க்சியவாதிகளை, லெனின் விரோதிகள்; விமர்சிப்பதில் உள்ள மிகத் துலாம்பரமாக அம்சம் என்னவென்றால் இந்த வெளிப்படையான விடயத்தை அவர்கள் கவனத்தில் கொள்ளாததாகும். ருசியாவில் வித்தியாசமான தன்மை என்னவென்றால், முழு ஜனத்தொகையிலும் தொழிலாளி வர்க்கம் மிகக் குறைந்தளவு விகிதத்தில் இருந்ததாகும்.

எனவே போல்செவிக் வாதிகள் சோவியத் சபைகளை முழுமையாக பெரும்பான்மையினராக இருந்தாலும் கூட நாட்டிலே அரசியல் ரீதியாக ஒரு சிறுபான்மையினராகவே காணப்பட்டனர். இத்தகைய நிலை முன்னேறிய முதலாளித்துவ நாடு ஒன்றில் நினைத்துப் பார்க்கவே முடியாது. இங்கிலாந்து பிரான்ஸ், இத்தாலியில், தொழிலாளர் சபைகளில் 65 வீத வாக்குகளால் ஒவ்வொரு நகரத்திலும் தெரிவு செய்யப்படும் அதே நேரத்தில் முழு சனத்தொகையிலும், 20 அல்லது 30 விகிதமான வாக்குகளைத்தான் பெறமுடியும் என்பது இயலாததாகும். இத்தகைய இடைவெளிக்கான சமூக அடிப்படைதான் என்ன, ருசிய சமூக அமைப்பின் பிறிதொரு வேறுபாடு என்னவென்றால் பிரமாண்டமான விவசாய பிரதேசம் காணப்பட்டமையும், அது எதிர்ப்புரட்சி படையினை உருவாக்குவதற்கான கிராமிய தனமாகவும் அமைந்ததுடன். நகரங்களை கைப்பற்றுவதற்கு முயற்சி செய்வதற்கும் ஏதுவாக இருந்தது. இப்படியாக சமூக கட்டுமானமும் அனேக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் காணவே முடியாது.

தொழிலாளி வர்க்கமானது அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்தை நேரடியாக பிரயோகிப்பதற்கான தொழில்நுட்ப, கலாச்சார, அரசியல் தயாரிப்புகள். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் இருப்பதைக் காட்டிலும், ருசிய சமுதாயத்தில் குறைந்த அளவில் காணப்படுவது மேலும் ஒரு வேறுபாடாகும். ருசிய புரட்சி தொடர்பான உலக நிலையும், மேலும் ஒரு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அம்சமாகும். சர்வதேச முதலாளித்துவம் அன்று இன்றையதை விட அதிகளவு பலமாக இருந்தது. அது மிகக் கூடுதலான பொருளாதார சமூக அரசியல் சித்தாந்த ரீதியான வளங்களுடன், அதிகளவு பரந்தளவிலான, ஆதரவுகளும் கடன் வசதிகளும், சர்வதேச ரீதியில் தன்னகத்தே கொண்டிருந்தது. எனவே ருசிய புரட்சியானது ஆரம்பத்தில் இருந்தே ஒரு எதிர்ப்புரட்சியினால், நசுக்கப்படக்கூடிய அபாயத்தில் இருந்தது. இதற்குக் காரணம் பெரும்பான்மையாக மக்கள், மந்த நிலையில் காணப்பட்டதும் புரட்சியினை ஆதரித்தவர்கள், ஒரு தடிப்பாக சிறுபான்மையினர் மட்டுமே என்பதாகும், அது மட்டுமல்லாமல், ஒரு ஆயுதம் தாங்கிய சர்வதேச எதிர்ப் புரட்சி சக்தியானது உடனடியான இராணுவ நடவடிக்கை மூலமும், ஆறு அல்லது ஏழு அல்லது எட்டு நாடுகளிலிருந்து படைகள் சகிதம் ருசியாவை ஆக்கிரமிப்பதற்கு தயாராக இருந்தன. இன்று அத்தகைய நடவடிக்கைகள் சற்று சிரமமானதாக இருக்கும்.

1975 ல் ஸ்பானிய இராணுவம் போர்த்துக்கலுக்குள் பிரவேசிக்கவில்லை எனவே பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்க இராணுவம் போர்த்துக்கலுக்குள் செல்லும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஸ்பெயின், இத்தாலி, அல்லது பிரான்சில் இடம்பெறக்கூடிய வெற்றிகரமான புரட்சி முதல் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு எத்தகைய நிலையை எதிர் நோக்க வேண்டும் என்று நான் எண்ணவில்லை. 1917 முதல் உலகத்தில் பல மாற்றங்களுக்கு உள்ளாகி உள்ளது. இத்தாலிய ஜேர்மனிய, பிரித்தானிய தொழிலாளர்கள் ருசிய தொழிலாளர்களை விட மிகத் திறமையாக செயற்படுவார்கள் என லெனினே பல தடவை கூறியுள்ளார்.

மூன்றாவது அகிலத்தை ஸ்தாபித்தவர்களின் எழுத்துக்களில் ருசிய புரட்சியானது ஒரு நிகழ்ச்சித் திட்டத்துடன் சித்தாந்த ரீதியாகவும், அமைந்து இருந்தது. இதனை சந்தர்ப்ப ரீதியாக ஏற்பட்ட நிகழ்வு அல்ல என்பதையே வேறுபடுத்திக் காட்டுவதற்கு மூன்றாவது அகில ஸ்தாபகர்கள் தமது எழுத்துக்களில் அதிக அக்கறை காட்டினர். மிகக் கஷ்டமானதும் சாதகமற்றதும் ஆன சூழ்நிலையில் இடம் பெற்றது என்பதே உண்மை நிலையாகும்.

இந்த வரலாற்று ரீதியான ஐந் தொகையில் நான் முன் வைக்கக் கூடிய ஐந்தொகையானது, நம்ப முடியாத ஒரு உண்மையாக இருக்கலாம். அதாவது லெனிச திட்டம் அல்லது லெனிச சாராம்சமாக நான் காண்பது, குறிப்பாகச் சொன்னால், அரசும், புரட்சியும், முதலாவது அகிலத்தின் முதன் நான்கு மாநாடுகளிலும் முன் வைத்த ஆவனங்கள் மற்றும் இடதுசாரி கம்யூனிஸம் இவற்றை ஒன்று திரட்டி தயாரித்த வேலைத் திட்டம் என்றாவது ருசியாவைக் காட்டிலும் முன்னேறிய ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுக்கே கூடுதலாகப் பொருந்தும் என்றே கூறலாம். அந்த வேலைத் திட்டமானது முழு அளவிலோ அல்லது கூடுதலான அளவிலோ ருசியாவில் பிரயோகிக்கப் படவில்லை. மாறாக அது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முழுமையாக பிரயோகிக்கப்படும்.

www.padippakam.com

புதிய சமதர்மம்
පුදිය සමධර්ම
PUTHIYA SAMADHARMAM
Registered as a news paper in Sri Lanka



வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள்,
ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## வாசுதேவ நாணயக்காரவுக்கு மங்கு சனியா?

மாபெரும் இனவாதி என கருதப்படும் பௌத்ததுறவி மாதுலாவே சோபித தேரோவுடன் வாசுதேவ நாணயக்கார கைகோர்த்து செயற்படுவதாகத் தெரிய வருகிறது. இவர் யுத்தம் தொடர வேண்டும் என்ற கருத்தில் மிகவும் விடாப்பிடியாக இருந்து வருவதாகவும் அறியப்படுகிறது. பல்வேறு அமைப்புகளால் யுத்தத்தை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து பேச்சுவார்த்தைகளிலும். யுத்தம் தொடர வேண்டும் என்ற கருத்தையே தோழர் வாசுதேவ நாணயக்கார கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. இன்று வாசுதேவ நாணயக்கார இனவாதிகளின் கைகளுக்குள் அகப்பட்டுள்ளார். பாராளுமன்ற சுகபோக ஆசையே இவரை இனவாத முகாமிற்குள் தள்ளியுள்ளது. இன்று பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் என கருதப்படும் லங்கா சமசமாஜக் கட்சி. கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும். இனவாத சக்திகளுடன் இணைந்து அரசு அதிகாரத்தை பெறுவதற்காக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. ஒருவிதத்தில் இன்று பல்லாயிரக்கணக்கான உயிர்களை விழுங்கியுள்ள இந்த கொடிய யுத்தத்திற்கு இவர்களும் பொறுப்பேற்க வேண்டும். தேசிய இனங்களை சிறுமைப்படுத்த பேரினவாதக் கட்சிகள் எடுத்த முயற்சிகளுக்கு இவர்களும் துணை போனதாலேயே இன்று ஆயுதப் போராட்டம் உச்ச நிலைக்கு வந்துள்ளது.

இடதுசாரிகள் ஒவ்வொரு முறையும் தமது கொள்கையில் இருந்து நழுவும் போது நாடு பெரும் அழிவுக்கு உள்ளாகிறது. எனவே வாசுதேவ நாணயக்கார போன்றோர்களின் முயற்சி தமிழ். முஸ்லீம் இனங்களையும். தொழிலாளி வர்க்கத்தையும் நடுத்தெருவில் விடும் நடவடிக்கையாகும்.

இருந்துபோதும் மக்கள் ஒன்றை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். தோழர் வாசுதேவ நாணயக்கார இன்று ஒரு சக்தியான தலைவர் இல்லை. இவர் ஒரு உக்கிப் போன ஜடமே.

1994 ல் நவசமசமாஜக் கட்சியில் இருந்து வாசுதேவ நாணயக்கார வெளியேறிய போது. அவருடன் ஒரு சிலரே அவரின் கொள்கையை ஏற்று வெளியேறினர். அவர்களும் இன்று வாசுதேவ நாணயக்காரவை விட்டு வெளியேறி உள்ளனர். இன்று வாசுதேவ நாணயக்கார ஆதரவாளர்கள்அற்ற ஒரு தலைவராவார். இவரின் அரசியல் குத்துக்கரணங்கள். புரட்சியை. எழுச்சியை விரும்பும் மக்களிடம் எடுபடாது என்பதே உண்மையாகும். இவரை ஒரு சக்தி என நம்பி யாரும் இவர் பின்னே சென்றால். அவர்கள் இறுதியில் பயித்தியக்கார மருத்துவமனைக்கே செல்வார்கள். தோழர் வாசுதேவ நாணயக்கார மீண்டும் பாராளுமன்றம் செல்வதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தார். மீண்டும் பொதுஜன முன்னணிக்குள் நுழையப் பார்த்தார். பின்பு ஜனதா விமுக்தி பெரமுனையுடன் உறவு கொள்ள பார்த்தார். முற்போக்கு சக்திகளுடன் இணைந்து சமாதானம் கதைக்க முயன்றார். இவையாவும் தோல்வி கண்டதன் எதிரொலியே இனவாதம் முகாமிற்குள் இவரை சரண் அடையச் செய்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றுடன் கைகோர்த்து செயற்பட்ட வாசுதேவ நாணயக்கார இவற்றின் ஈரத்திலேயே இவ்வளவு காலமும் காலத்தைத் தள்ளி வருகின்றார். முன்னொரு காலத்தில் வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் புரட்சி தீவலம் வந்த வாசுதேவ நாணயக்காரவின் தற்போதைய போக்கை இம்மக்கள் அறிந்தால் எவ்வளவு தூரம் ஆத்திரப்படுவார்கள்.

வாசுதேவ நாணயக்கதர போன்றவர்கள் சிலரை பல காலம் ஏமாற்றலாம். பலரை சில காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது.

## நுகேகொடை கிராம சேவையாளர் சேவை இது

தென் இலங்கையில் உள்ள பிரபல பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்களுக்கு மேற்படி கிராம சேவையாளர் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றார். ஆக முதல்தர பிரபல பாட—சாலைகளுக்கு 3 லட்சம் ரூபாவும். சாதாரண பாடசாலைகளுக்கு 25.000 ரூபாவும் கூலியாக பெறுகின்றார். ஒரு பிரபல பாடசாலையில் ஒரு பிள்ளையை சேர்ப்பதற்கு 17 வகையான ஆவணங்கள் தேவைப்படுகிறது. இந்த ஆவணங்களைப் பெறுவ—தற்கு இந்த கிராம சேவகருக்கு பல்வேறுபட்ட அரச நிறு—வனங்களில் இருப்பவர்களின் உதவி உள்ளதாகத் தெரிய—வருகிறது. தன்னிடம் உதவி கோரி வருபவர்களிடம் அவர்களின் முகவரி. முழுப்பெயர், பிறப்பு சான்றிதழ் பிரதி. விவாகப்—பத்திரப்பிரதி அடையாள அட்—டைக்குரிய படங்கள். அடையாள அட்டைப்பிரதி. போன்றவற்றை பெறுவாராம். இவற்றை வைத்—துக் கொண்டு பெற்றோர் விரும்பும் முகவரிக்குரிய ஆவணங்களை துரிதகெதியில் இந்த அதிகாரி செய்து கொள்—வாராம். இத்தகைய மோசடிகள் தொடர்பாக பலர் கைது செய்யப் பட்டிருந்த போதும், இதுவரை இந்த நடவடிக்கைகள் வீழ்ச்சி பெறவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

## புத்தர் சிலைகளை ஈவு இரக்கமற்ற முறையில் சிதைப்பு

புத்தர் சிலைகள் சிதைக்கப்படுகின்றன என்றால் யாரும் இலகுவில் நம்புவார்கள். அது ஆப்கானிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளின் வேலை என்றே! ஆனால் இந்த ஈனச் செயல் இலங்கையில் நடைபெறுகிறது என்றால் யாரும் மூக்கின் மேல் விரலை வைப்பார்கள். இன்று வடக்கு கிழக்கு பகுதியில் விலை மதிக்க முடியாத பெரும் கலை அம்சங்கள் விமானக் குண்டு வீச்சால், செல் தாக்குதல்களால், பல் குழல் பீரங்கிகளால் நாசமாக்கப்பட்டுள்ளன. நாசமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாசமாக்கப்படப் போகின்றன. (யுத்தம் தொடர்ந்தால்)

தென் இலங்கையில் பௌத்த சமயத்தையும் பௌத்த மக்களையும் காப்பாற்றப் போகின்றோம் என ஒப்பாரி வைத்து வரும், பிரதமர் தொடக்கம் சிங்கள உருமையா அமைப்பு வரை இவர்களின் கலைப் பொக்கிஷங்களை தினம் தினம் அழித்து வருவது பற்றி மூச்சு விடாமல் இருக்கின்றனர். கலையம்சம் பொதிந்த பௌத்த சின்னங்கள் கடந்த மாதத்தில் மிக அதிகளவில் அழிக்கப்பட்டுள்ளன. இதைப் பற்றி புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். கடந்தமாதம் மட்டும் இரண்டு பெரிய பௌத்த விகாரைகளில் உள்ள புத்தர் சிலைகள். புதையல் இருக்கும் என்ற நப்பாசையில் இடித்து நொருக்கப்பட்டுள்ளது. கண்டியில் உள்ள இராஜமகா விகாரையில், உள்ள புத்தர் சிலையும், கொக்கராவையில் உள்ள புத்தர் சிலையுமே இவ்வாறு நொருக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தெரிந்த நிலையில் 150,00 இடங்கள் தொல்பொருள் உள்ள இடங்களாக கொள்ளப்படுகின்றன. ஆனால் 100,000 இடங்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. 1991ம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டுவரை அதிகளவு தொல்பொருள் இடங்கள் சேதமாக்கப்படுதற்கு கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென அரச தரப்பினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். தண்டப்பணமும், 5000 ரூபாவில் இருந்து 50000 ரூபா வரை உயர்த்தப்பட வேண்டும் எனவும் சிறைத்தண்டனை 2 வருடங்களுக்கு உயர்த்த வேண்டுமென விரும்பப்படுகிறது. புத்தர் சிலைகளுக்கள் புதையல் இருக்கின்ற பிழையான நம்பிக்கையே இதற்குக் காரணம் என தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். 17ம் 18ம் நூற்றாண்டுகளில் செய்யப்பட்ட புத்தர் சிலைகளுக்கு பொன் முலாம் பூசப்பட்டது. இதனாலேயே இவர்கள் இன்று புத்தர் சிலைகளுக்குள் புதையல் இருக்குமென நம்பி சிதைப்பதற்கு காரணமாகிறது.

## மகிபால ஹேரத்திற்கு ஊர்வலம்செய்ய அனுமதி, யுத்தத்திற்கு எதிரான கலைஞர்களின் நிகழ்ச்சிக்கு தடைவிதிப்பு

யுத்தத்திற்கு எதிரான கலைஞர்கள் நாடு தழுவிய ரீதியில் தமது இசை நிகழ்ச்சிகள் மூலம், யுத்தத்திற்கு எதிரான தமது கருத்தைத் தெரிவித்து வருகின்றனர். கடந்த 3.6.2001ம் தேதி கலைஞர் ஜெயதிலகா பண்டாரா சகிதம் இக் கலைஞர்கள், தமது சமாதான நிகழ்ச்சியை நடத்த மாவனல்லைக்குச் சென்றுள்ளனர். இவர்களின் நிகழ்ச்சி நடத்தக்கூடாது என பொலிசார் தடை விதித்துள்ளனர். ஆனால் 2.6.2001ம் தேதி சர்வோதய அமைப்பினர் அமைதி ஊர்வலம் நடத்துவதற்கு பொலிசார் அனுமதி கொடுத்துள்ளனர். இவ் ஊர்வலத்தில் மகிபால ஹேரத்தும் அவரது ஆதரவாளர்களும் கலந்து கொண்டுள்ளனர். சர்வோதய அமைப்பினர் நடத்திய இவ் ஊர்வலத்தில் எட்டு முஸ்லீம் மக்களே கலந்து கொண்டு உள்ளனர்.

தற்போது மாவனல்லைப் பகுதியில் ஒன்றிணைந்த சமாதானக் குழு ஒன்று அரசாங்கத்தால் நிறுவப்பட்டு உள்ளதாக தெரிகிறது. இக்குழுவினர் தயாரித்து இருக்கும் அறிக்கையில், மாவனல்லைப் பகுதியில் புத்தர் சிலை தகர்க்கப்பட்டதால் தான் இத்தகைய அனர்த்தம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த அறிக்கையில் இப்பகுதியைச் சேர்ந்த வைத்தியர், மற்றும் பள்ளிவாசல் மதகுரு ஆகிய இரண்டு முஸ்லீம்களின் கையொப்பம் பெறப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஆனால் கையொப்பம் இட்ட இருவரும், தமது கையொப்பத்தை நீக்குமாறு கோரியுள்ளனர். அத்துடன் இருவரும் மாவனல்லைப் பகுதியை விட்டு வெளியேறியும் உள்ளனர். தற்போதும் மாவனல்லை பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு இரவில் பத்துப்பேர் ஆக முஸ்லீம் மக்கள் காவல் இருந்து வருவதாகத் தெரிகிறது.

இங்கு நடைபெற்ற அழிவு ஏன் ஏற்பட்டது. இதை எப்படி தடுத்து நிறுத்தலாம் என்பவை தொடர்பாக ஆராய்வதைத் தவிர்த்து, சேதமாக்கப்பட்ட புத்தர் சிலைகளையும், பள்ளிவாசல்களையும் திருத்துவதோடு அரச பணி நின்று விடும் என்றே நம்பப்படுகிறது. மாவனல்லையில் பாதிக்கப்பட்ட இடங்களை பார்ப்பதற்காக கொழும்பில் இருந்து பேரியல் அஸ்ரப், கபீஅசீம், பௌசி, அலவி மௌலானா, அத்தாவுட செனிவிரத்தினா ஆகியோர் சென்ற போது மக்கள் பலத்த எதிர்ப்பு காட்டியுள்ளனர். இவர்கள் அழிந்து போன பள்ளிவாசல்களை புனரமைப்புச் செய்வதற்கு நிதி வழங்குவதிலேயே குறியாக இருக்கின்றனர். இத்தகைய அனர்த்தங்களை புரிந்தவர் மீது நடவடிக்கைகளை எடுப்பதிலோ, மீண்டும் இத்தகைய வன்முறை இடம்பெறாமல் இருப்பதற்குரிய காரியங்களை செய்வதிலோ அக்கறை அற்றவர்களாகவே உள்ளனர்.

உண்மையில் மாவனல்லையில், முஸ்லீம் மக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை என்றே பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு உரிய நஸ்டஈடு கிடைக்கும் என்பதிலும், ஐயப்பாடே நிலவுகின்றது.

அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் தலைவர்கள் தங்களின் இருக்கைகளை உரியவாறு நிலை நிறுத்தவே அவசரப்படுகின்றனர் போல் தெரிகிறது. பௌத்த சிங்கள பேரினவாதிகள் புரிந்த அநியாயத்திற்கு எதிராக இவர்கள் சிறு விரலைக்கூட அசைக்கவில்லை. இதற்கு எதிராக போராடியவர்களையும், எப்படி பிரச்சினைக்குள் தள்ளலாம் என்பதே இவர்களின் போக்காக இருக்கிறது.

படிப்பகம்